Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 175

ஞாயிற்றுக்கிழமை
19 மே 2024

வைகாசி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"காஸாவைக் காப்பாதுங்கோ எண்டு சொல்லுறவை தான் இஞ்ச கொலைகார ஆமிக்காக பிரார்த்தனை செய்யினம் கண்டியளோ"

## முள்ளிவாய்க்கால் மண்ணில் மண்டியிட்ட மன்னிப்புச்சபை



முல்லைத்தீவு, மே 19

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் ஆக்னஸ் கலந்துகொண்டு இறுதிப்போரில் உயிரிழந்த மக்கள்நினைவாக முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்கு மலர்தூவி மண்டியிட்டு அஞ்சலி செலுத்தினார். (அ-ஒ-19)

# எத்தடை வரினும் எமது இலக்கை அடைவோம்

## எம் உறவுகளின் கல்லறைகள் மீது உறுதி எடுக்கின்றோம்

## முள்ளிவாய்க்கால் மண்ணில் சபதம்

**முல்லைத்தீவு, மே 19**

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவுநாளில் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட உறவுகளை நினைக்கையில் அவர்கள் சுமந்து வந்த கனவுகளையும் இலக்குகளையும் நினைத்து, குருதி உறைந்து சிவந்துபோன மண்ணிலிருந்து சபதம் எடுக்கின்றோம். எத்தடை வரினும் எமது இலக்கை அடைவோம் என்று எம் உறவுகளின் கல்லறைகள் மீது உறுதி எடுக்கின்றோம் - இவ்வாறு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் முள்ளிவாய்க்கால் மண்ணில் வைத்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14

## உயிரிழந்த இராணுவத்துக்கு கிண்ணியாவில் பிரார்த்தனை

கொழும்பு, மே 19

கடந்த 30 வருட கால போரை நிறைவுக்குக் கொண்டு வந்த இராணுவத்தினரை கௌரவப்படுத்தும் நிகழ்வும் துஆ பிரார்த்தனையும் கிண்ணியாவில்

10



## தமிழரசின் நினைவேந்தல் வட்டுக்கோட்டையில்

யாழ்ப்பாணம், மே 19

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கிளையால் பிரதான நினைவேந்தல் நிகழ்வுகள் வட்டுக்கோட்டை துணவியில் நாடாளுமன்ற

10

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மன்னாரிலும் கடைப்பிடிப்பு

மன்னார், மே 19

மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள தந்தை செல்வா சிலைக்கு அருகில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை

10

## யாழ். பல்கலை நினைவுத்தூபியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தூபியில் நடைபெற்றது.

10



## தமிழரசின் நினைவேந்தல் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, மே 19

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கான நினைவு அஞ்சலி,

14

## முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நீதிகோரி கவனவீர்ப்புப் போராட்டம்

வவுனியா, மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 15ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினரின் போராட்ட இல்லத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நேற்று இடம்பெற்றது.

14

## தேசியத் தலைவருக்கு வீரவணக்க நிகழ்வு

### பெருமளவு மக்கள் பங்கேற்பு

டென்மார்க், மே 19

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் மற்றும் அவரது குடும்பத்தினருக்குமான வீரவணக்க நிகழ்வு டென்மார்க்கில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. இதில் பல்வேறு நாடுகளில் இருந்தும்

14



# சஞ்சீவி

மக்கள் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் நீதிக்காகக் காத்திருக்கும் மக்கள்!

## சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மே 19**

**இலங்கையில் போர் நிறைவடைந்து 15 வருடங்கள் கழிந்தும் பாதிக்கப்பட்டவர்கள் நீதிக்காக தற்போதும் முள்ளிவாய்க்காலில் காத்திருக்கின்றனர் -இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் அக்னஸ் கலாமார்ட் தெரிவித்துள்ளார்.**

நேற்று முள்ளிவாய்க்காலில் உள்ள நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்திய அவர் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையில் மூன்று தசாப்த காலமாக நிலவிய ஆயுதம் தாங்கிய உள்ளகப் போரில் பாதிக்கப்பட்ட பலருக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தவறிய இலங்கை அதிகாரத் தரப்புகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் இணைந்த கவனயீனமான செயற்பாட்டை இன்றைய வருடப் பூர்த்தி நினைவூட்டுகின்றது. 15 வருடங்களுக்கு முன்னர் போரின் இறுதி நாள்களில் பெருமளவான அப்பாவிப் பொதுமக்கள் உயிர்நீத்த பகுதியில் இன்று நாம் மிகவும் துயரத்துடன் நிற்கின்றோம்.

இந்த நிகழ்வுக்கு முன்னதாக, போரின்போது தாம் இழந்தவர்களை நினைவுகூருவதற்காக தமிழ்ச் சமூகம் முன்னெடுத்திருந்த முயற்சிகளைத் தடுக்கும் வகையில் கைதுகள், பலவந்தமாக தடுத்து வைப்புகள் மற்றும் வேண்டுமென்றே தவறான கருத்துகளை பரப்பியிருந்தமை போன்ற நினைவுகூரலைத் தடுக்கும் வகையிலான சம்பவங்களை நாம் அவதானித்திருந்தோம். உயிர்நீத்தவர்களை நினைவுகூரவும், தமது அன்புக்குரியவர்களுக்காக அமைதியான முறையில் ஒன்றுகூடி தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குமான உரிமைக்கு அதிகாரத் தரப்பினர் மதிப்பளிக்கவேண்டும்.

போரில் இரு தரப்புகளிலிருந்தும் சர்வதேச சட்டங்களுக்கமையவும், சர்வதேச மனிதஉரிமைகள் மற்றும் மனிதநேயச் சட்டங்களை மீறும் வகையிலான குற்றங்கள் புரியப்பட்டுள்ளமை தொடர்பில் போதியளவு ஆதாரங்கள் காணப்படுகின்றமையை ஐக்கிய நாடுகளின் விசாரணைகள் இனங்கண்டுள்ள போதிலும், அவ்வாறான பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற அல்லது சுயாதீனமான தேசிய விசாரணைகளை முன்னெடுப்பது தொடர்பில் எவ்விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

போரின்போது வலிந்து காணாமலாக்கப்பட்ட குடும்பங்களின் எஞ்சியுள்ள அங்கத்தவர்கள், தமது அன்புக்குரியவர்களைத் தொடர்ந்தும் தேடியவண்ணமுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான நீதியை நீண்ட காலமாகத் தேடுவதை அவர்களிடமிருந்து அறிந்து கொள்வது மிகவும் மன உளைச்சலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு பதிலளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் சிறந்த தீர்வாக அமைந்திருந்த போதும், கடந்த 15 வருட காலப்பகுதியில் பொறுப்புக்கூறலுக்காக உள்ளகக் கட்டமைப்பை நிறுவுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகள் வெறும் கண்துடைப்புகளாகவே அமைந்திருந்தன.

இந்த வாரத்தின் முற்பகுதியில் ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரால் வெளியிடப்பட்ட அறிக்கையிலும், இலங்கையின் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளில் காணப்படும் இடைவெளிகள் காரணமாக, இந்த விடயம் தொடர்பான கறைகள் மாறாமல் காணப்படுவதை வலியுறுத்தியிருந்தது.

உண்மை, நீதி மற்றும் இழப்பீடு போன்றவற்றுக்காக இன்றும் ஆயிரக் கணக்கான பாதிக்கப்பட்டவர்கள் காத்திருக்கின்றனர். இன்று முள்ளிவாய்க்காலில் நாம் அவர்களுடன் உறுதியாக கைகோர்த்துள்ளோம் - என்றார். (எ-இ)



# பாண்டிருப்பில் நினைவேந்தல்

மட்டக்களப்பு, மே 19

மட்டக்களப்பு, பாண்டிருப்பில் நேற்றுச் சனிக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடத்தப்பட்டது. நிகழ்வு நடைபெற்றபோது ஆலய வளாகத்தில் பெரும் எண்ணிக்கையான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இங்கு நினைவேந்தல் நடத்துவதற்கு பெரிய நீலாவணைப் பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவைப் பெற்றிருந்தனர். ஆயினும் நகர்த்தப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிமன்றம் தடை உத்தரவை நீக்கியிருந்தது. (எ-இ)

# மக்களுக்குத் துணையாக நிற்கின்றது அமெரிக்கா

## ஜூலி சங் தெரிவிப்பு

கொழும்பு, மே 19

இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், ஒன்றுபட்ட எதிர்காலத்துக்கான நெகிழ்ச்சியை பிரதிபலிக்கும் வகையில், அனைத்து இலங்கையர்களுடனும் ஐக்கிய அமெரிக்கா துணை நிற்கிறது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் தனது எக்ஸ் வலைத்தளத்தில் இட்ட பதிவில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து நீதி, சம உரிமைகள் மற்றும் வாய்ப்புகளைத் தேடுபவர்கள் உட்பட இலங்கை மக்களுக்கு நாங்கள் உறுதியான பங்காளியாக இருக்கிறோம். வளமான எதிர்காலத்தை நோக்கிய இலங்கையின் பயணத்துக்கு ஆதரவளிப்பதற்கான எமது உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம் என்று அவர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார். (எ-இ)

# வெள்ளவத்தையிலும் முள்ளிவாய்க்கால் அஞ்சலி

கொழும்பு, மே 19

கொழும்பு வெள்ளவத்தையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்றுச் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் நடைபெற்றது. அதேவேளை, இந்த நிகழ்வு நடைபெற்ற இடத்தில் மற்றுமொரு குழு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டது. சிங்கள, தமிழ் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து இந்த நிகழ்வை வெள்ளவத்தைக் கடற்கரையில் நடத்தினர். நிகழ்வில் பங்கேற்ற சிவில் சமூக ஆர்வலர் ஒருவர் கைது செய்யப்பட்டார். ஆனாலும் முள்ளிவாய்க்கால் நிகழ்வை திட்டமிட்டவாறு ஏற்பாட்டாளர்கள் நடத்தி முடித்தனர்.

முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது. (எ-இ)





முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காக ஆத்மசாந்திப் பிரார்த்தனை, பிதிர்க்கடன் நிறைவேற்றல் என்பன நேற்று முள்ளிவாய்க்கால், கப்பல் வீதியில் உள்ள கடற்கரைப் பகுதியில் நடைபெற்றது. பிதிர்க்கடன் செய்யும் வழிபாடும், ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனையும் நேற்றுக்காலை 7.30 மணி முதல் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இடத்தில் நடைபெற்ற நிலையில், உறவுகளை இழந்த பெருந்திரளானோர் பிதிர்க்கடனை நிறைவேற்றினர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தணலில் வெந்துருகி...








இறுதிப்போரின்போது பல்லாயிரம் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் குருதிச் சகதியின் 15ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நேற்றையதினம் உணர்வு பூர்வமாக அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் பொதுஅஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு கண்ணீர் பீறிட்டு அழுது தம் உயிரானவர்களுக்கு அஞ்சலித்தனர். (ம-113,555)



முள்ளிவாய்க்கால் பெருந்துயர நாளை முன்னிட்டு, வவுனியா பண்டாரிக்குளத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள இளைஞர்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் பலர் இணைந்து குறித்த கஞ்சியை பண்டாரிக்குளம் பிரதான வீதியில் வைத்து வழங்கினார்கள். (ம-18)

# பிரிட்டனில் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்வாரத்தை முன்னிட்டு, தமிழினம் அனுபவித்த இன்னல்களை இளையோர் மத்தியில் கடத்தும் முகமான கண்காட்சி பிரிட்டனில் கடந்த 11ஆம் திகதியும் 12 ஆம் திகதியும் சொலிடாரிடியின் புரட்சிகர இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

கண்காட்சியில், புகைப்படப் பத்திரிகையாளர் அமரதாஸின் புகைப்படங்கள் காட்சிப் படுத்தப்பட்டன. மேலும் உலகளாவிய எதிர்ப்புகளை வெளிப்படுத்தும் விரிவான கதையுடன் ஒரு புதிய ஆவணப்படம் திரையிடப்பட்டது. வரலாறு எவ்வாறு கடினமானது என்பதை விமர்சிக்கும் கலைப்படைப்பு மற்றும் வெகுஜன படுகொலை



வரலாறுகளை மௌனமாக்கும் பாசாங்குத்தனம், எதிர்ப்பு இயக்கங்களை முன்னிலைப்படுத்தும் மற்றொரு ஆவணப்படத்துடன் காட்சிப்படுத்தப்பட்டது. 'நோ ஃபயர் சோன் (No Fire Zone)' என்ற ஆவணப்படமும் கண்காட்சியின்போது பார்வைக்கு வைக்கப்பட்டது.

இதில் போரின் இறுதிக் கட்டத்தின் பயங்கரத்தைச் சித்திரிக்கும் இறுதி வாரத்தில்



எவ்வாறு மக்கள் மீதான தாக்குதல்கள் கொடூரமாக்கப்பட்டன என்பது காட்சிப்படுத்தப்பட்டது. (ச)

# கோக்குவில் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், மே 19

முள்ளிவாய்க்காலில் படுகொலைகளை நினைவேந்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் பொதுமக்களுக்கு கஞ்சி வழங்கும் செயற்பாடு யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுமக்கள் பலரும் உணர்வு பூர்வமாகக் கலந்துகொண்டு முள்ளிவாய்க்கால் கஞ்சியைப் பெற்றுக்கொண்டதுடன் அஞ்சலி நிகழ்விலும் பங்கெடுத்தனர். (ம)



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளையின் ஏற்பாட்டில் காரைநகர் மூலக்கிளையின் தலைவர் கணேசபிள்ளை பாலசந்திரன் தலைமையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும், முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் நேற்று மதியம் வலந்தலை மடத்துக்கரை முத்துமாரியம்மன் ஆலய முன்றிலில் இடம்பெற்றது. (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரச் சீர்கேடு: உணவகத்துக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், மே 19

இணுவிலில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய மூன்று உணவக உரிமையாளர்களுக்கு எதிராக 60 ஆயிரம் ரூபா தண்டமும், கடும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இணுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் இணுவிலிலுள்ள உணவகங்களில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது மூன்று உணவகங்கள் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்தமை கண்டறியப்பட்ட நிலையில் உணவக உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. இதன்போது தம்மீதான குற்றச்சாட்டுகளை உணவக உரிமையாளர்கள் ஏற்றுக் கொண்டதையடுத்து அவர்களைக் கடுமையாக எச்சரித்த நீதிவான் 25 ஆயிரம் ரூபா, 15 ஆயிரம் ரூபா மற்றும் 20 ஆயிரம் ரூபா என மூவருக்கும் மொத்தமாக 60 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து உத்தரவிட்டார்.

(அ-ஓ-66)

**இணைப்ப இணையத்தளம் வழங்கும் நவீன திருமணச்சேவை**

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது. இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி தொடர்புகொண்டு உங்கள் துணையைத் தெரிவுசெய்யமுடியும்.

**பதிவுக்கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்**

Ts&Cs apply
Www.inaipa.com

## மூத்த பிரஜைகள் வட்டி அதிகரிப்பு

*அறிக்கை சமர்ப்பிப்பு*

இலங்கையின் மூத்த பிரஜைகளின் கணக்குகளுக்கான வட்டி அதிகரிப்புத் தொடர்பான அறிக்கை அடுத்த வாரம் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலா பிட்டிய தெரிவித்துள்ளார்.

மூத்த பிரஜைகளின் கணக்குகளுக்கான வட்டி வீதத்தை அதிகரிப்பது தொடர்பான அறிக்கையைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு நிதியமைச்சில் கூடியபோதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார். 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குச் சொந்தமான சுமார் 11 இலட்சம் கணக்குகள் உள்ளன. அவற்றை முறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

(ச-இ)

## சிங்கப்பூர் பிரதமராக லாரன்ஸ்

சிங்கப்பூர், மே 19

சிங்கப்பூரின் புதிய பிரதமராக பொருளாதார நிபுணர் லாரன்ஸ் வோங் நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக்கொண்டார்.

சுமார் 20 ஆண்டுகளாக சிங்கப்பூர் பிரதமராக பொறுப்பில் இருந்த 72 வயதான லீ சியென் லூங் ஓய்வை அறிவித்த பின்னர் புதிய பிரதமராக லாரன்ஸ் வோங் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

(ச)

**வேலையாட்கள் தேவை**

திருநெல்வேலியில் அமைந்துள்ள பிரபல்யமான வர்த்தக நிலையத்திற்கு பின்வரும் அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

1. விற்பனையாளர்
2. களஞ்சியக் காப்பாளர்
3. கணக்கு எழுதுநர்
4. காசாளர்
5. சமையலாளர்

அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

(CS 00536) S-1

**072 214 0335**

**காணி விற்பனைக்குண்டு**

மன்னார் கோவிற்குளம் பகுதியில் A-32 பிரதான வீதியுடன் அண்மித்த 50 ஏக்கர் காணி (வயற்காணி) விற்பனைக்கு உண்டு.

(25 ஏக்கர் படி 2 காணி)

(CS 535) A-1

தொடர்பு:- **077 011 5565**
**075 354 5044**

## மரண அறிவித்தல்



**தோற்றம்: 16.09.1944** **மறைவு: 18.05.2024**

### சுந்தரலிங்கம் நாகம்மா

நீர்வேலியை பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தி, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் நாகம்மா அவர்கள் நேற்று (18.05.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகசபையின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கந்தையா - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா சுந்தரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயரூபன், சாயிரூபன், காலஞ்சென்ற சசிரூபன் மற்றும் சதிரூபி, மங்களரூபன், நிர்மலரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகந்தா (ஆசிரியர், யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), சறோஜினி, சரவணபவன், மதிவதனி, சாரங்கா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துலக்ஷிகா, நிக்ஷலா, கேசகி, திசன் - றொசானி, கஜீபராஜ் - நேர்த்திகா, லக்ஷிகா, சிவகாமி, இளங்கீரன், இளங்கதிர், இளங்கீதன், றஷ்மிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கெவினாஸ் இன் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைள் இன்று (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் நீர்வேலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0768748811**

(CS 3536) A-1

**கோழிகள் முட்டைகள் மலிவு விலையில்**

**யாழ்ப்பாணத்தில் 34 வருட பூர்த்தியை முன்னிட்டு கோழிகள் முட்டைகள் மலிவு விலையில்**

- இலங்கையில் No 1 சிக்கன் விற்பனையாளர்,
- வாடிக்கையாளர்கள் நலன் கருதி எமது நிறுவனம் 18.05.2024 அன்று காலை 08.30 மணிக்கு அடுத்த கிளை பரமேஸ்வரா சந்தி அருகாமையில் இராமநாதன் வீதியில் நியூ சிற்றி கோழிக்கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர் நலன் கருதி 24 மணி நேர சேவை
- புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ், ஊர்கோழி, முட்டைகள்
- மொத்த கொள்முதலுக்கு ரான்ஸ்போட் இலவசம்

**எமது தலைமைக் காரியாலயம்**
**இல. 8, குருநகர் மார்கற் முன்பாக, யாழ்ப்பாணம்.**

(CS 534) A-1

தொடர்புகளுக்கு:
**021 430 3354, 076 359 3354**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 13 . 09 . 1955



**மறைவு** 17 . 05 . 2024

### சின்னத்தம்பி அமிர்தலிங்கம்

வித்தகபுரத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அமிர்தலிங்கம் நேற்றுமுன்தினம் (17.05.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சோதிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் தர்மலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு வித்தகபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனத்திற்காக பூதவுடல் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 00533) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இஸ்ரேலியப் பிரதமர் ஒரு போர்க்குற்றவாளி

*டிலான் பெரேரா வலியுறுத்து*



கொழும்பு, மே 19

இஸ்ரேல் பிரதமரை போர்க்குற்றவாளியாக அறிவித்து, அந்த நாட்டுடனான இராஜதந்திர உறவுகளை இலங்கை தற்காலிகமாக நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'உலகில் தற்போது அதிகார அரசியல் மாறியுள்ளது. சீனா மற்றும் ரஷ்ய ஜனாதிபதிகள் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். எனவே, எல்லாவற்றுக்கும் அமெரிக்கா சரணங் கச்சாமி எனக் கூறிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அடுத்த 25 வருடங்களில் உலக பொருளாதார அபிவிருத்தியின் தங்க கதவு ஆசிய பக்கமே உள்ளது.

எனவே, சீனா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளுடனான உறவைப் பலப்படுத்தவேண்டும். அதற்காக அமெரிக்காவை பகைத்துக்கொள்ளுமாறு கூறவில்லை. ஆனால் அமெரிக்காவின் தாளத்துக்கேற்ப ஆடுவது நிறுத்தப்பட வேண்டும்' - என்றார். (ம-44)

# ஊழலைத் தடுப்பதற்கு புதிய வேலைத்திட்டம்

கொழும்பு, மே 19

ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கு தொழில்நுட்பம் மற்றும் டிஜிற்றல் முறைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராரச்சி தெரிவித்தார்.

அரசியல் பொறிமுறையால் கொள்கை வகுக்க மாத்திரமே முடியும் எனவும் அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்கான தமது கடமையை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (எ-இ)

சனோதா

விநியோக முகவர்கள் தேவை
முகவர் (Distributors)

பதினான்கு வருடங்களாக அழகுத் துறையில் முன்னணி வகித்து நாட்டின் பெருமையை பாதுகாத்து வரும் சனோதா ஆயுர்வேத அழகு சாதனப் பொருட்களை விநியோகிப்பதற்கு நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் விநியோகத்தர்கள் அவசரமாகத் தேவைப்படுகிறார்கள்.

- ஒரு சிறிய லொறி அல்லது வான் சொந்தமாக இருப்பவர்கள்
- குறைந்த பட்சம் 15 லட்சம் வங்கி உத்தரவாதத்தை வைக்கும் திறன்
- குறைந்தபட்சம் 200 சதுர அடியில் சேமிப்பு வசதிகள்
- ஒப்பனை பொருட்கள் விநியோகத்தில் அனுபவம் பெற்றவர்
- பிரதேசம் பற்றிய நல்ல அறிவு தேவை

சனோதா ஆயுர்வேத தயாரிப்புகள்
11/B, Horagasmankada, Danovita
மின்னஞ்சல் : info@sanoda.lk
அனைத்து விசாரணைகள்
எங்களை தொடர்பு கொள்ளவும்
077 711 4209 / 0352 269 555
இணையம் - www.sanoda.lk

## இலங்கையில் முதல்முறை

# ஏ.ஐ. நுட்பத்தில் பசுமை இல்லம்

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கையில் முதன்முறையாக நிர்மாணிக்கப்பட்ட பசுமை இல்லம் கேகாலையில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்று அதனைத் திறந்து வைத்தார். செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்துடன் இலங்கையின் விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்துக்காக 100 பிரதேச செயலாளர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்விசாரா ஊழியர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி!

யாழ்ப்பாணம், மே 19

நாடு முழுவதுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில், அண்மையில் நடைபெற்றுவரும் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டமும், பேரணியும் நடத்தப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மற்றும் இணைந்த விஞ்ஞானக் கற்கைகள் அலகு மாணவர்களுக்கான பரீட்சை ஆகியன நிர்வாக உத்தியோகத்தரின் பங்களிப்பின்றி நடத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஏனையவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் முகமாகவும், யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களால் பல்கலைக்கழக மருத்துவ பீட முன்றலில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும் பேரணியும் கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. (ப-66)

## நீச்சல் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்

நெடுந்தீவு, மே 19

இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தால், நெடுந்தீவுப் பிரதேசத்தில் நடத்தவுள்ள நீச்சல் பயிற்சிநெறியில் இணைவதற்காக தங்களின் பெயர்களைப் பிரதேசசெயலகத்தில் வழங்கியவர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள், இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தின் பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்தப் படிவம் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகிறது எனவும் படிவத்தைப் பிரதேச செயலகத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறும் அறிவித்துள்ளனர். (ப-9)

## நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், மே 19

கைதடி சைவ ஐக்கிய சங்கத்தின் நூற்றாண்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கைதடி தெற்கு, இணுங்கித்தோட்ட அன்னை இரத்தினம் மணிமண்டபத்தில் தவத்திரு வேலன் சுவாமிகள் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடாதிபதி ச.பத்மநாபன் பங்கேற்கவுள்ளார். நூற்றாண்டுவிழா மலர் அறிமுக உரையை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர், நூலாசிரியர் அ.லோகநாதன் ஆற்றவுள்ளார். (ச)

### தீவகத்தைச் சேர்ந்த சிறுவர்களின்

# கல்விச் செலவுகளைப் பொறுப்பேற்கும் நயினை அம்மன் அறங்காலவர் சபை!

யாழ்ப்பாணம், மே 19

சைவமகாசபையின் வேண்டுகோளைச்சாதகமாகப்பரிசீலித்து, தீவக வலயச் சிறார்களைக் கணித, விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்பதற்கு பிரதானமாக யாழ்.நகரில் தனியார் கல்வி நிறுவனங்களில் மேலதிக கல்வியைப் பெறுவதற்கு அவர்களுடைய முழுமையான செலவுகளை ஏற்றுக்கொள்ள நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர்சபை சம்மதித்துள்ளது. இது தொடர்பான வேண்டுகோளைக் கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பி வைக்க அறங்காவலர் சபை கோரியுள்ளது.

-இவ்வாறு அகில இலங்கை சைவமகாசபையின் பொதுச் செயலாளர் மருத்துவக்கலாநிதி ப.நந்தகுமார் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

தீவகம் சார்ந்து இம்முறை க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் கணித, விஞ்ஞானக் கற்கைகளைக் கற்கத் தயாராகவுள்ள மாணவரை வழிப்படுத்தி, ஊக்கப்படுத்தி உதவுமாறு வேண்டுகின்றோம்.

விஞ்ஞானப் பிரிவுகளில் மூன்று பாடங்களிலும் சாதாரண சித்தி பெற்றால் துணை மருத்துவ ஆளணிக்குத் தெரிவு செய்யப்படமுடியும். தற்போது வட மாகாணத்தில் மிகக் குறைந்த தமிழ் மாணவரே மருத்துவமனைகளில் இந்த வெற்றிடங்களுக்குத் தகுதி பெறுகின்றனர். பல வெற்றிடங்கள் ஆளணி நிரப்பப்படாமலும் அல்லது தமிழ்தெரியாத பெரும்பான்மை இனத்தவரால் நிரப்பப்படும் அவல நிலையே பல ஆண்டுகளாக நீடிக்கின்றது. தீவகத்தில் எம் இருப்பையும், குழந்தைகளின் நல் எதிர்காலத்தையும் எம் மருத்துவமனைகளின் நோய்த் தடுப்புச் சுகாதாரப் பணிமனைகளின் தாதியர் குடும்பநல மாதுக்கள் உள்ளிட்ட துணை ஆளணியை எதிர்காலத்தில் தமிழ் தெரிந்த எம்மவரால் நிரப்பிச் சீரிய மருத்துவ சேவைக்கு கரம் கொடுக்க முன்வந்திருக்கும் நயினை நாகபூஷணி அறங்காவலர் சபையினருக்கு சைவமகாசபை [illegible] நன்றிகள் - என்றார். (ப-66)

## தம்பிரான் அடிகள்மீது தாக்குதல்

திருகோணமலை, மே 19

தென்கையிலை ஆதீனத்தின் இளைய பட்டம் சுவாமி திருமூலர்தம்பிரான் அடிகளார் மீது, டென்மாக் முருகன் ஆலயத்தில் வைத்து இனம் தெரியாத குழு தாக்குதல் நடத்தியுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான சுவாமி திருமூலர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தாக்குதலுக்கான காரணம் தெரியவரவில்லை. (ப-50)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகளை தவிர்த்து விடுவது நல்லது. வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் வழக்கம்போல இருக்கும். மகாவிஷ்ணுவை வழிபடுவதன் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**இடபம்:** சாதிக்கும்நாளாக அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் வழக்கம்போலவே இருக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். செலவுகள் ஏற்படும். மனவருத்தங்கள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் பணியாளர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும். நன்மைகள் அதிகரிக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். வேங்கடேசப் பெருமாளை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை எளிதில் முறியடிப்பீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வெளியில் செல்வதைத் தவிர்க்கவும்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆதாயம் உண்டாகும். உடல் நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் ஈடுபடவும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவு செய்ய வேண்டி வரும்.

**விருச்சிகம்:** தேவையற்ற செலவுகளும் ஏற்படும். முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்களால் காரியங்களில் அனுகூலம் ஏற்படும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** நல்ல வாய்ப்புகள் எதிர்ப்படும் நாளாக அமையும். அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். லாபம் எதிர்பார்த்ததைவிடவும் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும். பாதிப்பு எதுவும் இருக்காது. வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சுமாராகத்தான் இருக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். ஆதாயம் கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஏனிந்தத் தடை…?


தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிப்பதாக இந்திய அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர், பல நாடுகள் புலிகள் மீதான தடையை மறுபரிசீலனை செய்திருக்கின்றன. சில நாடுகள் தடையைக் கைவிட்டிருக்கின்றன. இன்னும் சில நாடுகள் தளர்வுப்போக்கைக் கடைப்பிடிக்கின்றன. ஆனால், இந்திய அரசாங்கமோ எந்த விட்டுக்கொடுப்பும் இல்லாமல் புலிகள் மீதான தடையைத் தொடர்ந்தும் இறுக்கமாகவே நடைமுறைப் படுத்தி வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே 'ஆயுத மௌனிப்பின்' பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஒருமுறை தடை தூசுதட்டப்பட்டு, மேலும் ஐந்து ஆண்டுகளுக்குத் தடை நீடிக்கப்பட்டிருக்கின்றது.

விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ்நாட்டில் இரகசியமாகச் செயற்படுகிறது, அனைத்துத் தமிழர்களுக்குமான தனி நாடு என்ற கோரிக்கையில் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் வலுவாகவே உள்ளது, இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு புலிகளின் நோக்கம் எதிரானது மட்டுமல்லாமல், இந்தியாவின் பாதுகாப்புக்கும் அந்த அமைப்பு அச்சுறுத்தலாகவே உள்ளது என்பனதான் புலிகள் மீதான தடைக்கு இந்தியா கூறும் கற்பிதங்களாக அமைந்திருக்கின்றன. இங்குதான், 'பூசணிக்காயை மட்டுமல்ல முழுப்பூசணித் தோட்டத்தையே சோற்றில் மறைக்கும்' பாரதத்தின் கபடத்தனம் அம்பலமாகியிருக்கின்றது.

ஸ்ரீலங்காவில் வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தைத்தான் தங்கள் தாகமாக விடுதலைப் புலிகள் கொண்டிருந்தார்களே தவிர, அவர்கள் ஒருபோதும் தங்களின் 'ஆயுதத் தாக்குதல் தளமாக' இந்தியாவைக் கொண்டிருக்கவில்லை. இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கோ, இறையாண்மைக்கோ, பிராந்திய நலன்களுக்கோ எதிராக ஒருபோதும் விடுதலைப்புலிகள் செயற்பட்டதில்லை. மேலும் இந்தியாவின் பகை நாடுகளுடன் எந்த வகையான உறவையும் விடுதலைப்புலிகள் வைத்துக் கொண்டதுமில்லை. இது இந்தியாவுக்கும் நன்கு தெரியும்.

இன்னும் சொல்லப்போனால், விடுதலைப் புலிகளின் இருப்பு 'நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்குப் பொசிந்தாற்போல்' இந்தியாவின் பாதுகாப்பையும்தான் உறுதிப்படுத்தியிருந்தது. 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கையின் எல்லைக்குள் - இந்தியாவுக்கு நெருக்கமாகப் பயணித்ததாக அறிந்ததுண்டா? பாகிஸ்தானினதும், சீனாவினதும் இராணுவக் கூட்டணி மாலைதீவுக் கடற்பரப்பை மையப்படுத்தி நகர்ந்ததாகக் கேட்டதுண்டா? இங்கே காக்கப்பட்டது புலிகளின் நலன்கள் மட்டுமல்ல, மாறாக இந்திய நலன்களும் அதன் இறையாண்மையும்தான். ஆனால், புலிகள் இல்லாத இன்றைய ஸ்ரீலங்காவின் நகர்வால் இந்தியா திருப்திப்பட்டுவிட முடியுமா? சீனா மிகச் சாதாரணமாக நடமாடுகின்றது, அணிசேராக் கொள்கை என்ற பெயரில் பிராந்திய வல்லரசான இந்தியாவின் கண்களுக்குள் விரல்விட்டு ஆட்டிக்கொண்டிருக்கின்றது இலங்கை. ஆதலால், புலிகள் மீதான தடைக்கு முன்னர் இந்தப் புரிதல்களை பாரதம் தன்னுள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

அல்லாமலும், பாரதம் பற்றிய புரிதல்களை தமிழ்த் தேசியத் தலைமைகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய காலமும் இதுதான். இந்தியாவே ஆபத்பாந்தவன் என்றெண்ணிக்கொண்டிருக்கும் தமிழர்களை விரல் விட்டு எண்ணிவிட முடியாத அளவுக்கு பாரதம் இதுவரை முதுகில் குத்தியிருக்கின்றது- வதைத்தெறிந்திருக்கின்றது. ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு பாரதம் பணிகின்றது என்றால், அணிசேராக் கொள்கை என்ற பெயரில் ஸ்ரீலங்கா அரசாங்கம் கொண்டுள்ள மாற்றுக்கொள்கைகள்தான் காரணம். எனவே இந்த விடயத்தில் இந்தியாவே சரணம் என்ற நிலைப்பாட்டை தமிழ்த் தலைமைகள் மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். சாதாரண கீரைக் கடைக்கே எதிர்க்கடை இருக்கும்போது…




# கலப்பு நீதிமன்றத்தை கொண்டுவர முயற்சி!

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இவ்வாறு குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், மே 19**

**இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு கலப்பு நீதிமன்றத்தை நிறுவி அதன் ஊடாக காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற யோசனையை காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் நிராகரித்துள்ளனர்.**

சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடனான சந்திப்பில் கலப்பு நீதிமன்றம் என்ற திட்டத்தைப் பரிந்துரைத்திருந்தார். இந்த நிலையிலேயே, கலப்பு நீதிமன்றம் என்ற பொறிமுறை நிராகரிக்கப்பட்டுள்ளது.

எங்கள் உறவுகளை இராணுவத்திடம் கையளித்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன. ஆதலால், கலப்புப் பொறிமுறை அல்லாமல், முற்றுமுழுதான சர்வதேச விசாரணையே தேவை. இலங்கை அரசாங்கத்தின் ஆணைக்குழுக்கள் எமக்குத் தேவையில்லை என்று காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகத்திடம் தெரிவித்துள்ளனர். (ம-19)

# சஜித்துக்கு ஆதரவாக மகேஷ் சேனநாயக்க!



ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித்துக்கு ஆதரவான பரப்புரை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க அறிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, சஜித்தை எதிர்த்துப் போட்டியிட்ட இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க இந்த வருடம் நடைபெறவுள்ள தேர்தலில் சஜித்துக்கு ஆதரவாகப் பரப்புரைகளில் ஈடுபடுவதற்குக் களமிறங்கியுள்ளமை பெரும் பரபரப்பான விடயமாக மாறியுள்ளது. சஜித் முன்னிலையில், ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்ட அவருக்கு, ஐக்கிய இராணுவ வீரர்கள் சக்தியின் பிரதானி பதவி வழங்கப்பட்டுள்ளது. (ம-44)

# நீர் மாநாட்டில் உரையாற்றும் சந்திரிகா

கொழும்பு, மே 19

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்தோனேஷியாவின் பாலி நகரில் நடைபெறும் உலக நீர் உச்சி மாநாட்டில் உரை நிகழ்த்த உள்ளார். (எ-இ)

# 46,042 சுற்றுலாவிகள்

இந்த மாதத்தில் முதல் 12 நாள்களில் 46 ஆயிரத்து 42 சர்வதேச சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இந்த வருடத்தில் மொத்தமாக 8 இலட்சத்து 30 ஆயிரத்து 693 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். (எ-இ)

# இராணுவத்தின் பூங்கா; எதிராகப் போராட்டம்!

இராணுவத்தால் நிர்மாணிக்கப்படும் பூங்காவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி சேவைச்சந்தைக்கு முன்பாக உள்ள சந்திரன் பூங்காவிலிருக்கும் இராணுவத்தினர் சட்டவிரோதமான முறையில் கட்டடங்கள் அமைப்பதை எதிர்த்தே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று பி.ப. 3 மணியளவில் இடம்பெற்றது. (அ-ஓ-113)

## நாளை


20.05.2024
திங்கட்கிழமை
வைகாசி - 07
சுபநேரம் : 11.52 - 01.22
ராகுகாலம் : 07.22 - 08.52
பிரதோஷவிரதம்

## நாளொரு நல்வார்த்தை

கடந்து போன நிமிடத்தை
விலைக்கு வாங்கி அனுபவிக்க
முடிகிற அளவிற்கு இந்த
உலகில் யாரும் பணக்காரர்கள்
கிடையாது
-ஒஸ்கார் வைட்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை சிலம்புப் பு
# புதிய சுந்தர திருமஞ்ச
# இன்று (19.05.20





சங்கானை, சிலம்புப்புளியடி
ஆலய பரிபாலன சபையினரி
திருமஞ்சம் ஒன்று உருவாக்கப்
திருமஞ்சம் உருவாகுவதற்கு
அனைவருக்கும் சிலம்பனது
கூறுவதில் மன மகிழ்வு கொள்கி

## செஞ்



சீரும்,
ஞானவை
சிறப்புக்குரி
விளங்குகி
டம் சிறக்க
நன் முறை

எமது சங்கை சிலம்புப் புளியடியி
கொண்டு சிலம்பனின் மஞ்சத்திற்க
பெருமையடைகின்றோம் தொன்று
இணைந்து பயணித்து வருகின்றத
ஆலயமானது கொண்டுள்ளது. அ
கட்டுப்பாடுகளையும் எமது பயண
இணைந்து கடந்து வந்த பயண
அன்பர்களின் ஆதரவுடன் வைரவ
இதற்காக தோள் நின்ற உள்நாட்
சபையினர் அனைவருக்கும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

## வெள்ளோட்டம் சிறப்


**M.S.K Transport**
கொழும்பு, தம்புள்ள போன்ற இடங்களுக்கான பாரவூர்தி சேவைகளை பெற்றுக்கொள்ள எம்மை நாடவும்
உரிமையாளர்: சி. நிசாந்
077 868 9382

**சிலம்பன் ரவல்ஸ்**
யாழ் - கட்டுநாயக்கா விமான நிலையம் மற்றும் உள்ளூர் வான் தேவைகளுக்கு எம்மை நாடவும்
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
077 856 6076

**பசுபதி அரைக்கும் ஆலை**
சகலவிதமான தானிய வகைகள் மற்றும் தூள் என்பவற்றை சிறந்த முறையில் எம்மிடம் அரைத்துக்கொள்ளலாம்.
உரிமையாளர்: ப. யோகானந்தன்
பிரதான வீதி, சங்கானை.

**இலட்சுமி ஸ்ரோர்ஸ்**
பலசரக்கு பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
உரிமையாளர்: ச.சிவலிங்கம்
பிரதான வீதி, சங்கானை

**பரம்ஸ் விலாஸ் சைவ உணவகம்**
உரிமையாளர் ப.விஜயகுமார்
பிரதான வீதி, சங்கானை.
T.P.: 077 754 9435

**கஜன் போட்டோ**
அரச அங்கீகாரம் பெற்ற படப்பிடிப்பாளர்
Reg No: DRP/JA/PG/17/1646
Online Enic தேசிய அடையாள அட்டை HD Digital Vidio & Still Photgdraphy
T.P.:077 711 1022
Chankanai

**A.M அ**
இல்
எம்மிடம் உ
அதிர்ஷ்ட
பரிசிலீத்து
வரர் ஆகு
உரிமைய
த. சகி
பிரதான
சங்கான

**மதுரம் Catering & சேயோன் ரவல்ஸ்**
எம்மிடம் விசேட தேவைகளுக்கும் அத்தோடு தினமும் ஓடர் மூலம் தேவையான உணவுகளை பெற்றுக்கொள்ளலாம்
உரிமையாளர்: பா. புஸ்பசோதி
T.P.: 077 472 0671

**ஐங்கரன் ஸ்ரோர்ஸ்**
சந்திரா விருந்தினர் விடுதி சந்திரா ரவல்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை
T.P.: 077 749 3555

**யுவேந்திரன் மின் ஒப்பந்தகார்**
உரிமையாளர்: யுவேந்திரன்
சிலம்புப்புளியடி, சங்கானை.
T.P.: 077 188 2814

**MRS ஸ்ரோர்ஸ் & MRS ரவல்ஸ்**
உரிமையாளர்: இ.சிவகரன்
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
T.P.: 077 990 6882

**AAP Engineers**
உரிமையாளர்: அன்ரனி பகீதரன் நேசதுரை பிரதாபன்
No. 150, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி – யாழ்ப்பாணம்.
T.P.: - 077 660 0711
- 077 365 5395

**Aachchy oil Shop and Spare Parts Aachchy Distribution and Pvt Ltd. Aachchy Travels**
T.P.:077 443 4969

**தாச ரவல்**
உள்ளூர்
வெளியு
பயணங்க
எம்மை ந
உரிமைய
பொ.தா
T.P.:
077 910


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியடி ஞான வைரவர் ஆலய
# ச வெள்ளோட்ட சிறப்பிதழ் – 2024
## 2024) ஞாயிற்றுக்கிழமை

வெள்ளோட்டம் சிறப்புற
வாழ்த்துகின்றோம்
அனைவரும் வருக சிலம்பனின்
அருள் பெறுக......

### ஆசிச் செய்தி

ப்புளியடி திருவருள்மிகு ஸ்ரீ சாமுண்டாம்பாதேவி சமேத ஸ்ரீ ஞான பைரவஸ்வாமிக்கு பையினரின் அயராத முயற்சியின் பலனாக கலையம்சங்களோடு கூடிய அதி சுந்தர உருவாக்கப்பட்டிருக்கின்றது. இத் திரு மஞ்சத்தை உருவாக்கிய ஸ்தபதி குழுவினருக்கும், வதற்கு பலவழிகளிலும் பேருதவிகள் புரிந்த எம் பெருமானுடைய மீளா அடியவர்கள் ம்பனது திருவருள் என்றென்றும் நிறைய வேண்டும் என பிரார்த்தித்து நல்லாசிகள் வு கொள்கின்றோம்.

**உற்சவாச்சார்யார்கள்**
**சிவப்பிரம்மஸ்ரீ நித்திய சிவதாண்டவ சிவாச்சார்யார்**
**சிவப்பிரம்மஸ்ரீ நித்திய சிவானந்த சிவாச்சார்யார் (சங்கானை)**

### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

சீரும். திருவும் நிறைந்த சங்கானைத் திருவூரில். அருள்பாலிக்கும் சிலம்புப் புளியடி ஞானவைரவப் பெருமான் ஆலயத்திற்கு புதிய திருமஞ்சம் உருவாக்கப்பட்டுள்ளமை சிறப்புக்குரியது. இத் திருக்கோவில் பரிபாலன சபையின் முயற்சியால் ஆலயம் புதுப்பொலிவுபெற்று விளங்குகிறது. பண்டத்தரிப்பு கோகிலா சிற்பாலயம் உருவாக்கிய இத்திரு மஞ்சத்தின் வெள்ளோட் டம் சிறக்க வாழ்த்துகின்றேன். பொது மக்களின் பங்களிப்பில் உருவாக்கப்பட்ட திருமஞ்சம் என்றும் நன் முறையில் பாதுகாக்க வேண்டும். பக்தர்கள் அனைவருக்கும் நல்லாசிகூறி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**

### வாழ்த்துச் செய்தி

புளியடியில் பதிகொண்டிருக்கும் சிலம்புப் புளியடி வைரவரின் பாதார விந்தங்களைப் பணிந்து மஞ்சத்திற்கான மலருக்கு வாழ்த்துச் செய்தியை அளிப்பதில் இந்து இளைஞர் மன்றத்தினாகிய நாம் ாம் தொன்று தொட்டு சிலம்புப் புளியடி ஆலய வைரவருடன் எமது இந்து இளைஞர் மன்றமும். வருகின்றது என்பது நாம் அறிந்த ஒன்று. பலதரப்பட்ட வரலாற்று சிறப்பம்சங்களை எமது வைரவர் டுள்ளது. அத்தோடு எமது இளைஞர்களின் ஆன்மிக விழுமியங்கள் பற்றிய சிந்தனைகளையும் மது பயணத்தில் கற்று வருகிறார்கள்.இந்து இளைஞர் மன்றமும் ஆலய பரிபாலன சபையினரும் ந்த பயணத்தில் வைரவரின் அருளாசியுடன் திருமஞ்ச அமைப்பிற்கு உள்நாட்டு. வெளிநாட்டு டன் வைரவரிற்கான திருமஞ்சம் அமைக்கப்பட்டது என்பது பெருமையான ஒன்றாகும். தொடர்ந்தும் ற உள்நாட்டு. வெளிநாட்டு உறவுகள் இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள்.ஆலய பரிபாலன வருக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் இந்து இளைஞர் மன்றம் சார்பில் றோம்.

**"வாரீர் வடம் பிடிப்போம் ஊர் கூடி**
**எம் பெருமான் வரம் பெறுவோம்"**

**இந்து இளைஞர் மன்றம்**
**சிலம்புப்புளியடி சங்கானை.**

### பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் இரு கண்களாகத் திகழும் யாழ்ப்பாணத்தின் சங்கானையிலுள்ள சிலம்புப் புளியடி ஞானவைரவர் ஆலயத்தின் வெள்ளோட்ட சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

" கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனும் ஆன்றோர் வாக்கிற்கிணங்க கிராமங்கள் தோறும் அமைந்துள்ள ஆலயங்களே மக்களின் கலாசாரம், பண்பாடு என்பவற்றைக் கட்டிக் காக்கின்றன. மக்களை அவர்களது துன்பங்களிலிருந்து ஆற்றுப்படுத்தி அவர்களிடையே ஆத்மார்த்தமான நட்புறவை மலர்விக்க உதவுகின்றன. அவ்வாறே சங்கானை சிலம்புப்புளியடி வைரவர் ஆயைத்தின் திருவருள் எல்லா உயிர்களுக்கும் கிடைக்க வேண்டுமென இறைவனை வேண்டிக்கொள்வதுடன் இவ் வெள்ளோட்ட நிகழ்வு சிறப்புற என்னுடைய உளம் கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி கவிதா உதயகுமார்**
**பிரதேச செயலர், வலி மேற்கு, சங்கானை.**

### வாழ்த்துச் செய்தி

மேற்படி ஆலயத்திற்கு ஒரு அழகிய திருமஞ்சம் அமைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கிய ஆலய நிர்வாகசபையினருக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு திருமஞ்சம் அமைப்பது நடமாடும் வசந்தமண்டபமாகவும் இராஜகோபுரத்தை ஒப்பானதாக அமைக்கப்பட்டு இதன் மேல் எம்பெருமான் வீதியுலா வந்து ஆலயத்துக்கு வருகை தரமுடியாதவர்களுக்கெல்லாம் எம்பெருமான் திருகாட்சியை கண்டு தரிசிப்பதற்காகவே அமைக்கப்படுகின்றன என்பதனை உணர்த்துகின்றன ஆகையால் வைரவப்பெருமான் மெய்யடியார்கள் அனைவரும் இன்புற்று வாழ எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மட்டுவில் மைந்தன்**
**ஸ்தபதி கதிர்காமநாதன் கதிர்றஞ்சன்**
**கோகிலசிற்பாலயம்,**
**அம்மன் வீதி, பண்ணடத்தரிப்பு.**

### "என் கடன் அவன் பணிசெய்து கிடப்பதே"

என்பதற்கிணங்க சங்கானை சிலம்புப் புளியடி ஞான வைரவப்பெருமானுக்கு புதிய சுந்தர திருமஞ்சம் அமைக்க ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளூர். வெளியூர் வள்ளாண்மை உள்ளம் கொண்ட அடியவர்கள் அனைவரையும் முதலில் பணிந்து அவர்களுக்கு எம் மனமார்ந்த கோடி நன்றிகள்.இன்று திருமஞ்ச வெள்ளோட்டம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.இச்செயல் சிலம்பனின் அருள் அன்றி வேறெதுவும் இல்லை. எம்மை கருவியாகப் பயன்படுத்தி தனக்கு தேவையானதை தானே பெற்றுக் கொண்டான் என்பதே உண்மை. திருமஞ்சம், திருமஞ்சத் தரிப்பு நிலையம் என்பன அமைந்திருப்பது எம் எல்லோர் மனங்களிலும் பெரும் மன நிறைவைத் தருகின்றது. இது எமது கிராம மக்களின் ஒற்றுமையை பறை சாற்றுகின்றது.

அன்பான அடியவர்களே!

உங்களது ஆன்மிகப் பணியால் இன்று எமது ஆலயம் துரிதகதியில் பெருவளர்ச்சி அடைந்து வருகின்றது. தொடர்ந்து அடியவர்களின் பங்களிப்புடன் உட் சுற்று மண்டபம், பூந்தோட்ட மதில் , கிறில் போன்ற வேலைகளை செய்ய எண்ணியுள்ளோம். இவற்றுக்கும் உங்கள் ஆதரவை எதிர்பார்த்துள்ளோம்.இன்றைய சுந்தரதிருமஞ்ச வெள்ளோட்ட நிகழ்வு சிறப்புற அடியவர்களுடன் நாமும் வாழ்த்துவதோடு இச் சிறப்பு மலரை பத்திரிகையில் வெளியிட அனுசரணை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.இப்பணியில் எம்முடன் கைகோர்த்து செயற்பட்டு வரும் சங்கானை சிலம்புப்புளியடி இந்து இளைஞர் மன்றத்தினருக்கும் எம் நன்றிகள். அத்தோடு இத் திருமஞ்சத்தை உருவாக்கிய கோகிலா சிற்பாலயம் (பண்டத்தரிப்பு) திரு. கதிர்றஞ்சன் அவர்களுக்கும் அவர் தம் குழுவினருக்கும் மனமார்ந்த நன்றிகள்.இக் கைங்கரிய இறை பணியில் எம்மோடு பயணிக்கும் அடியவர்கள் அனைவருக்கும் சிலம்பனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**
**திருமஞ்ச உருவாக்க குழு**
**செ.அரியதாசன், சு.நவநீதன், ப.விஜயகுமார்**

## சிறப்புற வாழ்த்துவோர்:

**M அதிர்ஷ்ட இல்லம்**
ம்மிடம் உங்கள் அதிர்ஷ்டத்தை சிலீத்து கோடீஸ் பரர் ஆகுங்கள்
உரிமையாளர்:
த. சகிஜன்
பிரதான வீதி, சங்கானை.

**விதுசா கிறீம் கவுஸ்**
உங்களுக்கு தேவையான ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பான வகைகள் என்பன விசேட தேவைகளுக்கு மொத்மாக எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, சங்கானை
T.P.077 949 4904

**சுரேஸ் ரவல்ஸ்**
சங்கானை, தொட்டிலடி, ஆலங்குழாய், கட்டுடை, மானிப்பாய் ஆகிய பிரதேசங்கள் ஊடாக மானிப்பாய் பகுதி பாடசாலைகளுக்கான போக்குவரத்து சேவை இடம்பெறுகின்றது.
உரிமையாளர் :
க.றமேஸ்குமார்
T.P.: 077 973 7314

**தயா ரவல்ஸ்**
நாடு முழுவதுக்குமான போக்குவரத்து சேவைகளுடன், உடுவில் பாடசாலை சேவையும் இடம்பெறுகின்றது.
உரிமையாளர:
சி.அருணோதயன்
T.P.: 077 114 0803

**மகேஸ்வரி உணவகம்**
எம்மிடம் காலை, மாலை அனைத்து விதமான உணவுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
உரிமையாளர் :
இ. ஆனந்தராசா
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை
T.P.: 077 215 4608

**சிற்றிசன் ரவல்ஸ்**
அனைத்து விதமான வாகன போக்குவரத்து தேவைகளுக்கும் வாகனங்கள் வாங்க விற்கவும் எம்மை நாடவும்
T.P.:
077 618 3086

**கிருஸ்ணா ஸ்ரோர்ஸ்**
எம்மிடம் பலசரக்கு சாமான், கோயில் அபிஷேக சாமான் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
உரிமையாளர்:
க. தவக்குமார்
பிரதான வீதி, சங்கானை
077 592 6979

**தாசன் ரவல்ஸ்**
உள்ளூர் மற்றும் வெளியூர் பயணங்களுக்கு எம்மை நாடவும்
உரிமையாளர்:
பொ.தாசன்
T.P.:
77 910 9072

**சிலம்பன் பாரவூர்திச் சேவை**
கொழும்பு தம்புள்ள போன்ற இடங்களுக்கு மரக்கறிகளை ஏற்றி இறக்க எம்மை நாடவும்.
உரிமையாளர:
இ.முகுந்தன்
T.P.:
077 490 2243

**Sun Decorations and Panthal Sevai**
**சண் டெக்கறேசன் அன்ட் பந்தல் சேவை**
நவீன பந்தல் சேவை மற்றும் சிறந்த அலங்கார வேலைகளின் முன்னோடிகள்
பிரதான வீதி, சங்கானை.
**சண் மல்ரி சென்ரர்**
பிரதான வீதி, சங்கானை.
077 873 9470 / 021 225 0218

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் உரும்பிராய் வீதி
- 1 3/4 பரப்பு, 2 பரப்பு.
திருநெல்வேலி - நாவலடி வீதி
பரப்பு 1 குளி 5.22

**077 104 8865**

## வீடு விற்பனைக்கு

யாழ்.நகரில் இருந்து குறுகிய நேர பயண தூரத்தில் சுதுமலையில் கௌரவமான சுற்றாடலில் 3 அறை, சமையல் அறை, இணைந்த குளியலறை, 2 கோல், மேல்மாடி, வெளிப்புற குளியலறை, 2 Toilets உடனான **வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.**
தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
(Rest INN Medical clinic க்கு உகந்தது). **நகரில் வேலை செய்யும் ஆண்களுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு.**

**076 789 6016, 074 031 9808, +164 760 79624**

அரியாலை
## சரஸ்வதி சனசமூக நிலையம், சரஸ்வதி மத்திய நூல் நிலையம்.

## பகிரங்க கூறுவிலை கோரல்

எமது நிலையத்தின் விஸ்வநாதன் கலையரங்கிற்கு முன் உள்ள (100' x 61') கரப்பந்தாட்ட திடல் உள்ள பகுதியை உள்ளக அரங்காக மாற்றுவதற்கு நிர்வாகத்தினர் தீர்மானித்துள்ளனர். இவ் வேலைகள் யாவும் உருக்கு வேலைகளாக (Metal Work) அமையவுள்ளது.

இவ் வேலையைச் செய்ய விரும்பும் உருக்கு வேலை செய்யக் கூடியவர்கள் குறித்த பகுதியைப் பார்வையிட்டு (மாலை நேரம் விரும்பத்தக்கது) இவ் வேலையைச் செய்வதற்கான தங்களின் முத்திரையிடப்பட்ட கூறுவிலைகளை வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**குறிப்பு:**
இக் கூறுவிலைகள் யாவும் பிரசுரிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் வழங்கப்பட வேண் டும்.

**நிர்வாகம்**

தொடர்புகளுக்கு:
077 666 6236 - **தலைவர்,**
074 160 8767 - **செயலாளர்,**
077 725 4305 - **பொருளாளர்.**
(cs.55116) (N-1)

## தமிழரசின்...

முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனின் தலைமையில் நேற்று மாலை 5 மணிக்கு இடம்பெற்றது. முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர் நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் பொதுச் சுடரேற்றப்பட்டு மலர்மாலையும் அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து வட்டுக்கோட்டையின் பல பகுதிகளிலும் இருந்து கலந்துகொண்ட மக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியின் வரலாற்றை உள்ளடக்கிய துண்டறிக்கையும் விநியோகிக்கப்பட்டது.

நினைவேந்தலில் முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலசந்திரன், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஜெயந்தன், சிறி ஜீவா, மகளிர் அணி செயற்பாட்டாளர் பரமானந்தவள்ளி, சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ஒ-125)

## தவறவிடப்பட்டுள்ளது

ராஜா திரையரங்கிற்கும், செல்வா உணவகத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் தேசிய அடையாள அட்டை, ATM Card ஆகியன அடங்கிய கைப்பை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.
NIC :- 200118400359
Name: Rajeswaran Thelarsan (CS/529) J-1

**P.Number :- 076 201 6874**

## வேலையாள் தேவை

கொட்டல் மனேஜர் தேவை.
அத்துடன் ரூம் போய் தேவை.
பென்சினியர் விரும்பத்தக்கது.

**0777242427, 0777 4127 13**

## விசா ஆலோசனை சேவை

ஐரோப்பிய நாடுகளான போலந்து, ருமேனியா இத்தாலி, பிரான்ஸ் நாடுகளுக்கும் லண்டன், கனடா, நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா நாடுகளுக்குமான விசிட் Work, Student குடும்ப விசாகளுக்கான உடனடி ஆலோசனைகளுக்கு எம்மை தொடர்புகொள்ளுங்கள்.
**இல.69, பலாலிவீதி,**
**திருநெல்வேலி- யாழ்ப்பாணம்,**
**குருமண்காடு - வவுனியா, வெள்ளவத்தை - கொழும்பு.**

**077 604 0373,+44 7460 720270**

## வேலை ஆட்கள் தேவை

கொக்குவிலில் இயங்கும் AC திருத்தும் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை
வேலை தெரிந்தவர்கள், பழக விரும்புவர்களும் இணைந்து கொள்ள முடியும்.

## வேலையாட்கள் தேவை

போட்டோக் கொப்பி கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை
**இடம்:** யாழ் கச்சேரிக்கு அருகில்
தொடர்புகளுக்கு: **076 678 7288**

## பணியாளர் தேவை

தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு
1) விற்பனையாளர்
2) கணக்காளர்
3) திருத்துநர்
போன் கடையில் வேலை செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**யாழ் போன் சொப்**
**No:10, New Market, Jaffna.** (CS 530) A-1

தொடர்பு:- **077 3611 282**

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் நவீன திருமணச்சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது. இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி தொடர்புகொண்டு உங்கள் துணையைத் தெரிவுசெய்யமுடியும்.
**பதிவுக்கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்**
Ts&Cs apply
Www.inaipa.com

## முள்ளிவாய்க்கால்...

இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை இடம்பெற்றது. மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத் தலைவர் அருட்பணி நவரட்ணம் அடிகளார் பொதுச்சுடரை ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து மக்கள் உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து அமைக்கப்பட்டிருந்த சின்னத்துக்குமுன் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். (அ-ஒ-60)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு கீழ் காணும் பதவிகளுக்கு வேலையாட்கள் தேவை.
- இயந்திர இயக்குநர் (Cord)
- புத்தகம் கட்டுநர்

**தொடர்புகளுக்கு: 077 601 7773**
**077 199 8747** (CS 523) A-1

## வீடு விற்பனைக்கு

நாவலர் வீதி - கண்டி வீதிக்கு அருகில் 1 1/2 பரப்புக் காணியுடன் கூடிய **வீடு விற்பனைக்கு உண்டு.**
(விலை: 3 கோடி 80 லட்சம்).
தரகர் தேவை இல்லை. (CR/42465) J-1

**077 408 0578, 077 855 6382**

## தவறவிடப்பட்டுள்ளது

சாவகச்சேரி சந்தைக்கு அண்மையில் மோட்டார்சைக்கிள் (GI 7697) வாகனப்புத்தகம் தவறவிடப்பட்டுள்ளது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (CS/55118) J-1

**077 169 7950**

## கடை வாடகைக்கு உண்டு

சாவகச்சேரி நகரின் கண்டி வீதி (A-9) மத்தியில் (சந்தியில்) கீழ், மேல் கடைகள் (கட்டடம்) **வாடகைக்கு உண்டு.**

**076 815 6380**

## வேலையாள் தேவை

மானிப்பாய் வீதி மருதனார் மடத்தில் உள்ள வாகனங்களின் இருக்கைகளுக்கு கவர்தைக்கும் கடைக்கு **வேலையாட்கள் தேவை.** (CS/55122) J-1

**077 325 0840**

## சைக்கிள் விற்பனைக்கு

**சைக்கிள் (மவுண்டன் யப்பான்)**
**விற்பனைக்கு உண்டு**
தொடர்புகளுக்கு:
**077 706 6487**
யாழ்ப்பாணம்

## பதவி வெற்றிடம்

ஜயசிங்க விநியோகஸ்தர்கள் தையல் நூல் மற்றும் ஆடை அணிகலன்களின் முன்னணி விநியோகஸ்தர் ஆவார். இது நாடளாவிய சில்லறை விற்பனையாளர்களை உருவாக்கியுள்ளது. தங்கள் வாழ்க்கையில் தெளிவான இலக்குகளைக் கொண்ட மற்றும் வாழ்க்கையின் வெற்றிக்கான லட்சியங்கள் நிறைந்த விற்பனைப் பிரதிநிதிகளை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

கீழ்வரும் பதவி நிலைக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### விற்பனைப் பிரதிநிதி

**கடமைகள்:**
- ✓ விற்பனை நிலையங்களுக்குச் சென்று வாடிக்கையாளர்களின் முற்பதிவுகளை மேற்கொள்ளல்.
- ✓ பொருத்தமான முறையில் வாடிக்கையாளர்களின் நிலுவைகளை வசூலித்தல்.
- ✓ வாடிக்கையாளர்களிடையே எமது சின்னத்தை விளம்பரப் படுத்தல்.

**தகைமைகள்:**
- ✓ க.பொ.த. (உ/த) சித்தி.
- ✓ செல்லுபடியாகும் இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம்
- ✓ தொடர்பாடல் திறன்
- ✓ அதிக தனிப்பட்ட திறன்களைக் கொண்டவராகவும், குறைந்த பட்ச மேற்பார்வையுடன் சவால்களை எதிர்கொள்ளத் தயாராக உள்ளவராகவும் இருக்க வேண்டும்.
- ✓ தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் சரளமாக உரையாடக்கூடிய திறன்.

APPLE THREAD
**APPLE THREAD COMPANY (PVT)LTD.**
354/D, Meemana, Pokunuwita
Tel : 0773911922 / 0779 310 115
Email : sales.applethread@gmail.com

## உயிரிழந்த...

நேற்று இடம்பெற்றது. அதன்படி, 'பயங்கரவாதம் அற்ற நாட்டை உருவாக்குவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் நிகழ்வை கிண்ணியா சமூக நலன் விரும்பிகள் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. (அ-ஒ-இ)

## யாழ்...

பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. அதன் பின்னர் மெழுகுவர்த்தி ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-ஒ-27)

## காரைநகர் அபிவிருத்திச் சபையின் 11.02.2024ஆம் திகதி நடைபெற்ற விஷேட பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட புதிய யாப்பின் பிரகாரம் நடைபெறும் புதிய நிர்வாக சபையை தெரிவு செய்வதற்கான 2வது பொதுக்கூட்டத்தை ஒத்திவைத்தல்

26.05.2024 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற இருந்த 2ஆவது பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதனை அனைத்து காரைநகர் அபிவிருத்திச் சபை அங்கத்தவர்களுக்கு தயவுடன் அறியத் தருகின்றேன்.

**காரைநகர் அபிவிருத்திச் சபை**
**சின்னாலடி, காரைநகர்,**
**தொலைபேசி : 021 2211757**
**19.05.2024**

**பொன்னம்பலம் பரந்தாமன்**
**செயலாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RELIANCE INTERNATIONAL MIGRATION SERVICES

அவுஸ்திரேலியாவிற்கு உங்கள் கனவை நனவாக்க விரும்புகிறீர்களா?



அவுஸ்திரேலியாவின் பிஆர் பயிற்சி பெற்ற புலம்பெயருதலுடன் திறவுங்கள்.

உங்களுக்காக வழங்கப்பட்டுள்ள சலுகையின் பல விசா வகுதிகள் மற்றும் சந்தர்ப்பங்களையும் ஆய்வு செய்யுங்கள் நம்பிக்கையுடன் உங்கள் புலம்பெயர்தல் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்காக ரிலையன்ஸ் இண்டர்நெஷனல் மைகிறேசன் சேவைகள் நிபுணத்துவ வழியை வழங்குகின்றது.

திலிங்க விஜேசிங்ஹ
பதிவு செய்யப்பட்ட புலம்பெயர் முகவர்
MARA: 1463863 | MIA 8513

காமினி குருப்பு
உள் நாட்டு பிரதிநிதி

Contact us for FREE ELIGIBILITY check.
Hot Line: +94 76 767 8281

www.rimigrations.com இல. 351/1, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை, கொழும்பு-03 colombo@rimigrations.com

## காணி விற்பனைக்கு

"நான் கொடுப்பதற்கு பழகிக் கொண்டேன் - காரணம் என்னிடம் அதிகம் இருப்பதால் அல்ல, இல்லாதவனின் வலியை புரிந்துகொண்டதால்"

யாழ். சென் பற்றிக்ஸ் பாடசாலைக்கு அண்மையில் அதி நவீன வசதிகளுடன் 6 பரப்புடன் கூடிய வீடு மூன்றும், மானிப்பாய் வீதியில் 3 கடைகளும், யாழ். கஸ்தூரியார் வீதியில் 3 1/2 பரப்புக் காணியும், யாழ். தட்டாதெருவுக்கு அண்மையில் 2 1/2 பரப்புக் காணியும், யாழ் பிறவுண் வீதியில் 5 பரப்புக் காணியும், யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு அண்மையில் 52 அடி அகலமும் 214 அடி நீளமும் கொண்ட 3 கடைகளும், யாழ். திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில் ஆடிய பாதம் வீதியில் பழைய தபாற்கந்தோர் வீதியில் 4 1/2 பரப்புக் காணியும், யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நமசிவாயம் பாடசாலைக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும், யாழ். கஸ்தூரியார் வீதியில் 16 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்ட மாடிக் கடையும், யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் 5 பரப்பில் அமைந்த மாடி வீடும், யாழ். மின்சார நிலைய வீதியில் 3 பரப்பு, 4 பரப்பு காணியும், பிரப்பங்குளம் வீதியில் 5 பரப்பும் வீடும் விற்பனைக்கு உண்டு.

**T.P. 077 723 2535**

(CS 519) A-1

கனகசபை தர்மகுலசிங்கம்
இல.183, காலி வீதி,வெள்ளவத்தை.

இல.185, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி - 100 ரூபாய்

**077 334 1281**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காளி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மரம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## வாடகைக்கு

யாழ். நகரில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் உடனடியாக **வாடகைக்கு வீடு உள்ளது.**

**077 329 0419**

(CS/55100) J-1

## மணமக்கள் தேவை

யாழ் கௌரவ குடும்பம் (V) 1993 இல் பிறந்து கொழும்பில் Multinational Company இல் உயர்பதவி வகிக்கும் மணமகனுக்கும், 1986 இல் பிறந்து கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் உயர் பதவி வகிக்கும் மணமகளுக்கும், பொருத்தமான மணமக்களை எதிர்பார்க்கின்றோம். இந்து Or R.C மதத்தினர் தொடர்பு கொள்ளவும்.

**T.P.077 969 9984**

(CS/27237) J-1

## மணமகன் தேவை

யாழ். இந்து, கௌரவகுடும்பம், 1970 பிறந்த பட்டதாரி தனியார் சேவையில் பணிபுரியும் மகளுக்கு தகுந்த வரனை தாயார் எதிர்பார்க்கின்றார்.

தொடர்பு:- **077 783 2943**

(CS/513) J-1

# கடற்படையினருக்கு பதவியுயர்வு

கொழும்பு, மே 19

15 ஆவது தேசிய படைவீரர் தினத்தை முன்னிட்டு 3 ஆயிரத்து 146 கடற்படையினர் அடுத்த தரத்துக்குப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். 15 ஆவது தேசிய படைவீரர் தினத்தை முன்னிட்டு, முப்படைத் தளபதி மற்றும் ஜனாதிபதியின் ஒப்பு தலுடன் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று கடற்படை தெரிவித்துள்ளது. (ச)

## தேவை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தரமான தேங்காய் எண்ணெய்க்கு **விநியோகத்தர்கள் தேவை.**

**077 329 0419**

(CS/55100) J-1

## THE ROYAL COLLEGE OF JAFFNA

10ம் ஆண்டு மாணவர்களுக்கான மாலை வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. சிறு குழுக்களாக கூடிய கவனம் கொடுக்கப்படும்.

**குபேரன் கட்டட மாடி, பிரான்பற்று வீதி, சங்கானை.**

தொடர்பு: **077 675 1649**

(CS/55098) J-1

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதிக்கு அருகாமையில் **4 பரப்புக் காணியும்**, 4 அறைகளுடன் கூடிய **வீடும் விற்பனைக்கு உண்டு.**
தரகர் தொடர்புகொள்ள வேண்டாம்.

தொடர்பு:- **077 368 6186**

(CS/55094) J-1

## சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்

## விசாகப்பொங்கல்

# காத்தவராயன் சிந்து நடைக் கூத்து



சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்
வருடாந்த விசாகப் பொங்கல்
காலம் தோறும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.
சைவப் பாரம்பரியத்தை பேணும் வகையில் எமது ஆலயத்தில்
43 வருடத்தின் பின் வருகின்ற **20.05.2024** ம் திகதி
**திங்கட்கிழமை இரவு 7.00 மணிக்கு**
**முதலி அம்மன் கலாமன்றத்தின்**
**"மாலைக்கு வாதாடிய மைந்தன்"**
**காத்தவராயன் சிந்து நடைக்கூத்து நடைபெறும்.**
**அன்று இரவுப் போசனமும் வழங்கப்படும்.**
**அன்னை அடியவர்கள் அனைவரும் கலந்து அன்னை அருளினைப் பெற்றுக்கொள்ளவும்.**


**தேவஸ்தான பரிபாலன சபை**
**தொடர்புக்கு :- 077 763 4074**

(CS/55102) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு
06 . 08 . 1940



மறைவு
19 . 04 . 2024

## கந்தையா மயில்வாகனம்

**(முன்னாள் தலைவர் - அருள்மிகு நாச்சி அம்மன் தேவஸ்தானம் , இருபாலை. முன்னாள் தலைவரும் தற்போதைய நிர்வாகசபை உறுப்பினரும் - பாரதி கலாமன்றம், இருபாலை)**

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 17.05.2024 வெள்ளிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்
077 498 1014

(CS/55111) J-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
28 . 07 . 1970



இறப்பு
17 . 05 . 2024

## திருமதி ஜெயகௌரி கிருஷ்ணமூர்த்தி (குட்டி)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயகௌரி கிருஷ்ணமூர்த்தி (குட்டி) அவர்கள் கடந்த 17-05-2024 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை - சிவபாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற கனகரத்தினம் - புஸ்பகுணம் தம்பதியரின் மருமகளும், கிருஸ்ணமூர்த்தி (ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், அபர்ணா (ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், கொழும்பு), நிருத்திகா (மாணவி, விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயந்தன் (பிரான்ஸ்), முகுந்தன், ஜெயலட்சுமி, பிரபாகரன், கருணாகரன் (லண்டன்) ,காலஞ்சென்ற ஜெயந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சுகுமார் புஷ்பராணி (ஆசிரியர், மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை), கமலவதனம் (பிரான்ஸ்), கௌரி, உதயரட்ணம், லோகேஸ்வரி, துர்க்கா (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.05.2024) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்.
077 924 0177 (பிரான்)
077 622 2445

பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம்.

(CS/527) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 03 . 1944



மறைவு
17 . 05 . 2024

## சின்னத்தம்பி வீரசிங்கம்

பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கட்டுவன் மற்றும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வீரசிங்கம் 17.05.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - பூரணம் (பவளம்) தம்பதியரின் அன்பு மருமகனும், நேசமலரின் அன்புக் கணவரும், றசீந்திரன், றஜனி, சுரேந்திரன், றோகினி, சுதேந்திரன், கஜனி, கயூறி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெனீபா, ரவீந்திரன், அனித்தா, விக்னேஸ்வரன், ருஜாந்தினி, அஜந்தன், கனிஸ்லன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.05.2024) திங்கட்கிழமை பட்டினசபை வீதி, சங்கானையில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 032 2584

பட்டினசபை வீதி,
சங்கானை.

(CS/55119) J-1

# மரண அறிவித்தல்



## கனகரத்தினம் மகேஸ்வரி

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் மகேஸ்வரி (சக்திவேலழகன் மரக்காலை உரிமையாளர்) 17.05.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், சின்னப்பு - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, தங்கராசா, தருமராசா, யோகராசா,யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயரூபன் (பிரான்ஸ்), சிறிஜெயந்தன், சிறிதுஷாந்தி, தோமெறாஜ் (பிரான்ஸ்), வைகுந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அயில்டா (பிரான்ஸ்), அனிஸ்ரன், ஜெயந்தி (பிரான்ஸ்), ராஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெமிமா, கபிரியல், அக்ஷயா, அஸ்மிகா, விஷானிகா, வைஷாலி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (19.05.2024) கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரியில் அவரின் இல்லத்தில் 01.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

தகவல்:
குடும்பத்தினர்
077 981 6425

(CR/42469) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரு விடயங்களில் தங்கியுள்ள ஐ.எம்.எப். இரண்டாம் தவணை

கொழும்பு, மே 19

சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டாவது கடன் தவணையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் இலங்கை அரசாங்கம் இன்னமும் இரு விடயங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்பாடல் பணிப்பாளர் ஜூலி கோசாக் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச நாணயநிதியத்தின் நிர்வாகக் குழுவின் மதிப்பாய்வை நிறைவு செய்வதற்கு இரண்டு விடயங்கள் அவசியம். அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட முன் நடவடிக்கைகளை செயற்படுத்தல். இரண்டாவது நிதி உத்தரவாதங்களின் மதிப்பாய்வை நிறைவு செய்தல்.

இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் பலனளிக்கத் தொடங்கியுள்ளன. நான்காண்டு காலத் திட்டத்தில் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கும் இலங்கை அதிகாரிகளும் இடையிலான பொருளாதாரக் கொள்கைகள் பணியாளர் மட்டத்தில் உடன்பாட்டை எட்டியுள்ளனர். இந்த உடன்படிக்கைகள் நிறைவடைந்தால் இலங்கைக்கு சுமார் 337 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கும். கடன் மறுசீரமைப்பைப் பொறுத்தமட்டில், வெளிநாட்டு தனியார் கடனாளிகளு டன் இடம்பெற்ற பேச்சுகள் நிறைவடைந்துள்ளன. இலங்கையின் உத்தியோகபூர்வ கடனாளிகளுடன் கொள்கையளவில் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துகின்றது - என்றார். (எ-இ)




# போர்ட்டர் மீது தாக்குதல் ரணவீர வாக்குமூலம்

கொழும்பு, மே 19

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் 'போர்ட்டர்' ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர நேற்று விமானநிலைய பொலிஸாரால் அழைக்கப்பட்டிருந்தார்.

அமைச்சரிடம் சுமார் ஒரு மணி நேரம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர்.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர கடந்த 14ஆம் திகதி காலை தனது மனைவியை வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வதற்காக கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு வந்திருந்த போதே இந்தப் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

சேவை வழங்கும் 'போர்ட்டருக்கு' 1000 ரூபா சம்பளம் வழங்கப்படவேண்டும் என விமானநிலையத்தில் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டிருந்த பின்னணியில், போர்ட்டருக்கு 700 ரூபாவை இராஜாங்க அமைச்சர் வழங்கியமை சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. 'போர்ட்டரை' இராஜாங்க அமைச்சர் தாக்கிய காட்சி பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான போர்ட்டர் இதுவரை பணிக்குத் திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# 671 பேர் கைது

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேடசுற்றிவளைப்புகளின்போது போதைப்பொருள்களுடன் 12 பெண்கள் உட்பட 671 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 30 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். போதைப்பொருள்களுக்கு அடிமையான 10 பேரை புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 173 கிராம் ஹெரோயின், 117 கிராம் ஐஸ், 207 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# படகு விபத்தில் மீனவர் மரணம்

கொழும்பு, மே 19

மீன்பிடிப் படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொரு மீனவர் காணாமற் போயுள்ளார். கடந்த 12ஆம் திகதி வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காக 5 மீனவர்கள் கடலுக்குச் சென்றிருந்தனர். (எ-இ)

# தோட்டத் தொழிலாளரை ஏமாற்றுகின்றது அரசு

## மயந்த எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 19

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா நாளாந்த சம்பளம் வழங்கப்படும் எனக் கூறி ஏமாற்றியுள்ளது இந்த அரசாங்கம். அரசியல் இலாபத்துக்காக பொய்யுரைக்கப்பட்டுள்ளது.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா நாளாந்த சம்பளமாக வழங்கப்படும் என உறுதியளித்தார். ஆனால் இது இன்று பொய்யாகியுள்ளது. வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் ஆயிரத்து 350 ரூபா அடிப்படைச் சம்பளமாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்துக்கும் ஜனாதிபதி தெரிவித்த விடயத்துக்குமிடையில் பரஸ்பர தன்மை காணப்படுகிறது. அரசியல் இலாபத்துக்காக ஜனாதிபதி இவ்வாறு பொய்யுரைத்தமையை எண்ணிக் கவலையடைகிறோம். எமது ஆட்சியில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் நிச்சயம் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீனவர்கள் புழல் சிறையில்

சென்னை, மே 19

இந்தியக் கடல் எல்லைக்குள் எல்லைதாண்டி உட்பிரவேசித்ததாகத் தெரிவித்து இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 14 பேரும் தமிழ்நாட்டில் உள்ள புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு குடாரப்பிலிருந்து கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை அட்டைத் தொழிலுக்கு ஐந்து மீன்பிடிப் படகுகளில் சென்ற இவர்கள் காங்கேசன்துறைக்கு நேராக இந்தியக் கடல் எல்லைப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்ததாகத் தெரிவித்து நாகப்பட்டினம் கடற்பகுதியில் வைத்து இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஐந்து படகுகள் கைப்பற்றப்பட்டு அதிலிருந்து 14 மீனவர்களும் கைது செய்யப்பட்டு வேதாரணியம் கடலோரப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதையடுத்து சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் 14 மீனவர்களும் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் மே 31 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (அ-ஒ-100)

## காங்கேசன் - நாகப்பட்டினம்
# பயணிகள் கப்பல் சேவை இப்போதைக்கில்லை

காங்கேசன்துறை - நாகப்பட்டினத்துக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை மீண்டும் தொடங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அது மீண்டும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி முதல் கப்பல் போக்குவரத்தைத் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அன்றைய தினம் தொடங்கப்படாமல் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நிர்வாக அனுமதி மற்றும் கடல் சார் வணிக உரிமம் ஆகியவற்றின் காரணமாக, அன்றைய திகதியிலும் கப்பல் போக்குவரத்து தொடங்கப்படாமல் 19 ஆம் (இன்று) திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், பழைய கப்பல் என்பதால் சில பாதுகாப்புக் குறைபாடுகள் இருப்பதாகவும், அதனைச் சரிசெய்தால் மட்டுமே உரிய அனுமதி வழங்கப்படும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (அ-ஒ-இ)

## எத்தடை...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வின்போது ஆதீன முதற்குரு தவத்திரு அகத்தியர் அடிகளாரால் வாசிக்கப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழினப்படுகொலை முள்ளிவாய்க்காலில் உச்சந்தொட்டு இன்றுடன் 15 ஆண்டுகள் நிறைவடைகின்றது.

ஒவ்வொரு படுகொலைக்குப் பின்னரும் 'இனிமேல் இது நடக்கவே கூடாது' என்ற உணர்வுப் பிரவாகம் வலுவாக எழுந்தாலும், அதுவே தொடர்கின்றது. இனிமேல் நடக்கவேகூடாது என்ற உணர்வுப் பிரவாகம் அர்த்தமற்றதாகிவிட்டது. ஈழத்தமிழினப் படுகொலை ஒரு வரலாற்று செயன்முறையாக காலனித்துவத்திலிருந்து ஆரம்பிக்கின்றது.

தமிழினப் படுகொலையின் வழிவரைபடம் பேரரசுக் கட்டமைப்பின் புவிசார் அரசியல் நலன்களைத் தவிர்த்து உருவாக்கப்படவில்லை என்பது ஐயமுறத் தெரிகின்றது. புவிசார் அரசியல் நலன்களின் பிராந்தியத் தளங்களில் ஏகாதிபத்தியத்தை தக்கவைப்பதற்காகப் பேரரசுக் கட்டமைப்பை துணைக் குத்தகைக்கு விட்டுள்ளது.

அதனுடைய ஒருவடிவமாகத்தான் இஸ்ரேலையும் இலங்கையையும் அவதானிக்கவேண்டும். தமிழினப்படுகொலை நடந்து 15 ஆவது ஆண்டில் பலஸ்தீனப் படுகொலை அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

**பலஸ்தீனமும் ஈழமும்**

பலஸ்தீனப் படுகொலையை உன்னிப்பாக அவதானிப்பவர்களுக்கு தமிழினப் படுகொலைக்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பலஸ்தீனப் படுகொலைக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமைப் பண்புகள் இருப்பதை அவதானிக்கலாம்.

ஆசியாவில் இலங்கைத் தீவினதும், குறிப்பாக திருகோணமலைத் துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவமும் மத்திய கிழக்கில் பலஸ்தீனத்தின் கேந்திர முக்கியத்துவமும் புவிசார் அரசியலில் கோலோச்சுவதற்கு பேரரசுக்கு மிக அவசியமானது. பேரரசைக் கட்டமைப்பதற்கு அதன் நலன் சார்ந்த எந்த விலையையும் கொடுப்பதற்கு பேரரசு தயாராக இருப்பதை இவை கோடிட்டுக்காட்டுகின்றன.

பேரரசும் அதன் வலையமைப்பும் உற்பத்தி செய்கின்ற இராணுவத் தளவாடங்களுக்கும் பேரரசின் பொருளாதார இருப்புக்கும் தொடர்ந்து உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போர்க்களங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதை யாரும் மறுக்கமுடியாது.

ஏக பேரரசை கட்ட முயலும் நாடுகள் தான் மனித உரிமைகளையும் பொறுப்புக் கூறலையும் போதிக்கின்றன என்பது அபத்தம். இவை இரண்டுமே ஒவ்வாத் தன்மை கொண்டவை. இது பலஸ்தீனப் படுகொலையில் மிகத் தெளிவாகவே உறுதிசெய்யப்பட்டுள்ளது.

2002 பேச்சு முறிவடைவதற்கு அமெரிக்கா காரணமாக இருந்தது என்பது ஏற்கனவே ஆய்வுகள் மூலம் வெளிவந்த உண்மையாக உள்ளது. அதுவே இன்று காஸாவில் போர் நிறுத்தத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றது.

**பலஸ்தீன படுகொலை ஆச்சரியமில்லை**

ஐ.நா. சபையும் அதன் ஏனைய அலகுகளும் சர்வதேச சமூகமும் அதன் கட்டமைப்பும் எவ்வாறு முள்ளிவாய்க்காலில் மிகப்பெரிய மனிதப் பேரவலத்தைத் தடுக்கமுடியாமல் போனதோ அதே போல் இன்று அவர்களால் பலஸ்தீனப் படுகொலையையும் தடுக்கமுடியாமல் போனது எமக்கு ஆச்சரியத்தை தரவில்லை.

தமிழினத்தின் மீதான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி, புதுப்புது வடிவங்களை எடுத்துள்ளன. அது தமிழினத்தின் தன்னிறைவுப் பொருளாதாரத்தின் மீது, பண்பாட்டின் மீது, கல்வியின் மீது, ஈழத்தமிழினத்தின் மரபுகள் மீது, சைவத் தலங்கள் மீது, தொல்லியல் வரலாறு மீது. ஈழத்தமிழினத்தின் வரலாறு மீதானதாக இருக்கலாம்.

**உளவியல் போர்**

ஈழத்தமிழினத்தின் மீது திணிக்கப்பட்டுள்ள உளவியல் போரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் வடிவமாகவே கருதவேண்டியுள்ளது. உளவியல் போரின் நோக்கம், ஈழத்தமிழினம் தமிழ்த் தேசியத்தின் மீது கொண்டிருக்கின்ற நம்பிக்கையைச் சிதைத்தலாகும். தமிழ்த் தேசியத்தின் நம்பிக்கை விழுமியங்கள்தான் ஈழத்தமிழினத்தின் கூட்டுப் பிரக்ஞையை விழிநிலையில் வைத்துக்கொண்டுள்ளது. தமிழ்த் தேச நலத்தின் [illegible]ன போரின் பரிமாணங்களின் வடிவங்கள் எல்லாரும் அறிந்ததே.

முன்னெப்பொழுதும் இல்லாதவாறு தமிழினம் தனது இருப்பின் மீதான அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றது.

**விலகிச் செல்லமுடியாது**

தமிழினத்தின் இருப்பை சவாலுக்குட்படுத்தும் அலகுகளை எதிர்த்துப் போராட வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்துக்குள் தமிழினம் வலிந்து நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றுக் கடமை ஒட்டுமொத்த தமிழினத்துக்கானது. யாரும் இந்தப்பெரும் பொறுப்பிலிருந்து விலகிச் செல்ல முடியாத வரலாற்றுத் தேவைக்குள் நாம் இருக்கின்றோம்.

**சபதம் எடுக்கிறோம்**

முள்ளிவாய்க்கால், பேரவலத்தின் குறியீடு மட்டுமல்ல, அடக்குமுறை எதிர்ப்பின் குறியீடும்கூட. முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவு நாளில் கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்ட உறவுகளை நினைக்கையில் அவர்கள் சுமந்து வந்த கனவுகளையும் இலக்குகளையும் நினைத்து, குருதி உறைந்து சிவந்துபோன மண்ணிலிருந்து சபதம் எடுக்கின்றோம். எத்தடை வரினும் எமது இலக்கை அடைவோம் என்று எம் உறவுகளின் கல்லறைகள் மீது உறுதி எடுக்கின்றோம். அதன் அடிப்படையில்,

நினைவுகூரல் கூட்டுரிமை சார்ந்தது மட்டுமல்ல பண்பாட்டு உரிமையும் கூட. ஆகவே இலங்கை அரசு தமிழினப் படுகொலை நினைவுகூரலைத் தடுக்க முடியாது.

தமிழினம் தமிழினப் படுகொலைக்கான நீதியை சர்வதேசவிசாரணைக்கூடாகவே கோரி வருகின்றது. அந்தக்கோரிக்கையை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

தமிழினம் ஒரு தனித்துவமான தேசத்திற்குரிய அலகுகளைத் தன்னகத்தே கொண்ட இனம்.

கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக் கூடாக தமிழின இருப்பு கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது. இதுவும் இன அழிப்புப் போரின் ஓர் அங்கமென நாம் கருதுகின்றோம்.

தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்துக்குரியவர்கள் என்பதையும் தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும் ஒருபோதும் பாரதீனப்படுத்தவியலாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்கவேண்டும்.

எம் பாசமிகு உறவுகளே! தமிழ்த் தேசிய விடுதலை தரும் நம்பிக்கையுடன் தொடர்ந்தும் பயணிக்க முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பு அழைப்பு விடுக்கிறது - என்றார். (அ-ஒ-5)

## தேசியத்...

பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்றுள்ளனர்.

தேசியத் தலைவரின் மூத்த சகோதரனான வேலுப்பிள்ளை மனோகரன் தலைமையில் வீரவணக்க நிகழ்வு நேற்று உள்ளூர் நேரம் பி.ப. 2 மணிக்கு டென்மார்க்கில் உள்ள அரங்கத்தில் இடம்பெற்றுள்ளது.

விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட மண்டபத்தில் தேசியத்தலைவரின் ஆளுயர திருவுருவப்படம் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் தேசியத் தலைவரின் குடும்பத்தினரை ஓவியமாக வரைந்து தயாரிக்கப்பட்டிருந்த திருவுருவப்படமும் நடுவில் வைக்கப்பட்டு வீரவணக்க நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தேசியத் தலைவர் உள்ளிட்ட அவரது குடும்பத்தினரான மதிவதனி, சார்ள்ஸ் அன்ரனி, துவாரகா, பாலச்சந்திரன் ஆகிய இவருக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில் இந்நிகழ்வு வேலுப்பிள்ளை மனோகரன் குடும்பத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில், டென்மார்க் மற்றும் லண்டன், கனடா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இருந்தும் பொதுமக்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் எனப் பெருமளவானவர்கள் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-100)

## முள்ளிவாய்க்கால்...

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி 2 ஆயிரத்து 645 ஆவது நாளாகப் போராடி வரும் உறவுகள், இனப்படுகொலைக்கு நீதிகோரியும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரியும் கவனவீர்ப்புப்போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (அ-ஒ-110)

## தமிழரசின்...

கிளிநொச்சி பசுமைப்பூங்காவில் நேற்று நடைபெற்றது. அஞ்சலி நிகழ்வில் மதகுருமார்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (அ-ஒ-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளியேறியது சென்னை



**நடப்பு ஐ.பி.எல். தொடரில் பிளே ஓப் சுற்றுக்குத் தகுதி பெறாமல் வெளியேறியது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.**

பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியுடனான நேற்றைய ஆட்டத்தில் 27 ஓட்டங்களால் சென்னை சுப்பர் கிங்ஸ் தோல்வியைத் தழுவியது. இந்த ஆட்டத்தில் 18 ஓட்டங்களைவிட குறைவான ஓட்ட எண்ணிக்கையில் தோல்வியடைந்திருந்தால் சென்னை அணி பிளே ஓப் சுற்றுக்குத் தகுதி பெற்றிருக்கமுடியும்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. பெங்களூர் அணிக்கு கோலி மற்றும் பிளெசிஸ் அதிரடியான ஆரம்பம் கொடுத்தனர். மழையின் குறுக்கீட்டால் ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது. அதன்பின்னர் பெங்களூர் அணியின் அதிரடி கொஞ்சம் அடங்கினாலும் 10 ஆவது பந்துப் பரிமாற்றத்திலிருந்து வெளுத்து வாங்கினர். பிளெசிஸ் 39 பந்துகளில் 54 ஓட்டங்களையும், கோலி 29 பந்துகளில் 47 ஓட்டங்களையும், படித்தர் 23 பந்துகளில் 41 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். இறுதியில் கிரீன் 17 பந்துகளில் 38 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக் கொடுக்க 5 இலக்குகளை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது.

சென்னை அணி 201 ஓட்டங்களைப் பெற்றாலே பிளே ஓப் சுற்றுக்குத் தகுதி பெறமுடியும் என களமிறங்கிய நிலையில் முதலாவது பந்திலேயே ருத்ராஜ் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார். ரச்சின் ரவிந்த 37 பந்துகளில் 61 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பின்வரிசையில் ஜடேஜா 22 பந்துகளில் 42 ஓட்டங்களையும், டோனி 13 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தாலும், 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சென்னை 7 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியடைந்தது. (ஒ-5)

கிழக்குப் பல்கலையில்

# பொலிஸாரின் அடாவடிக்கு யாழ். பல்கலை கண்டனம்

முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை நினைவேந்தல்களை கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்னெடுத்துக் கொண்டிருக்கையில் பொலிஸாரின் அநாகரிக மற்றும் அடாவடியான செயற்பாடுகள் ஊடாக மனித உரிமைகளுக்கு எதிராக நினைவுகூரல் உரிமையைமறுக்கின்றசிறிலங்கா அரசின் செயலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்றுச் சனிக்கிழமைஇரவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பொலிஸாரின் அடாவடியென்பது அண்மைக் காலங்களில் பெருமளவில் அதிகரித்திருப்பது இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது. கடந்த ஆண்டு மாவீரர்நாள் நிகழ்வுகளை பொலிஸார் அத்துமீறி பல்கலைக்கழக முதன்மை வளாகத்தினுள் நுழைந்து குழப்பங்களை ஏற்படுத்தி தடுத்து நிறுத்தியிருந்ததுடன் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவேந்தல் வளைவை அகற்றிச் சென்றமையையும் இங்கே பதிவு செய்ய வேண்டும்.

தமிழர் தாயகத்தில் கேள்விக்குள்ளாக்கும் நினைவுகூரும் உரிமை தொடர்பில் கடந்த வியாழக்கிழமை அன்று வெளியிட்ட அறிக்கையில் கிழக்கு மாகாணத்தில் முடிவற்றுத் தொடரும் இதுபோன்ற நினைவேந்தல்களைத் தடுக்கும் மற்றும் அச்சுறுத்தும் செயற்பாடுகள் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது அவதானிப்பைச் செலுத்தியிருந்தது.

கிழக்குப் பல்கலையில் தமிழ் மாணவர்கள் தமது பெரும்பான்மையை இழந்துள்ள நிலையில் தமிழ்மக்களின் உரிமைக்கான பயணத்தில் எம்மோடு தோளோடு தோள் நின்று பயணிக்கும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் தொடர்ச்சியானதும், தன்னெழுச்சியானதுமான செயற்பாடுகளைத்தடுக்கும் செயற்பாடுகளின் அங்கமே இதுபோன்ற விதிகளுக்குப் புறம்பான ஒடுக்குமுறைகளின் நோக்கமாகும். கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் காத்திரமான முன்னோக்கிய பயணங்களுக்குப் பிராந்தியத்தின் சிவில் சமூகங்களும், செயற்பாட்டாளர்களும் பக்கபலமாகத் திகழ வேண்டும் என்பதோடு பல்கலைக்கழகத்தைச் சமூகத்தினுள்ளும் சமூகத்தைப் பல்கலைக்கழகத்தினுள்ளும் கொண்டு செல்வதுமே பொருத்தமான வழியாகும் என்பதனைப் பதிவு செய்கின்றோம் - என்றுள்ளது. (ஒ-26-66)

**பணிப்பெண் தேவை**

நன்றாக உணவு சமைப்பதிலும் வீட்டை சுத்தம் செய்வதிலும் நல்ல அனுபவமுள்ள, தங்கி நின்று வேலை செய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை.

076 287 8157

**Room வாடகைக்கு /கடை வாடகைக்கு**

யாழ்ப்பணத்திலிருந்து 700 m சிவன் கோவிலுக்கு முன்பாக மூன்று கடை வாடகைக்கும் சிவன் பண்ணை வீதி இல.65, களஞ்சிய அறை, அறை, வீடு ஆகியன வாடகைக்கும் மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு தங்குமிட அறை வாடகைக்கும் உண்டு.

ABI HOLYDAY HOME இற்கு முன்பாக

தொடர்பு: 077 863 1768, 077 727 7177

**ICT, விஞ்ஞான வகுப்புக்கள் தரம் 6 - 11 (T/E)**

5 வருட கற்பித்தல் அனுபவம் கொண்ட ஆசிரியரால் நுணுக்கங்களை பயன்படுத்தி இலகுவான முறையில் வீடு வந்து தனிப்பட்ட முறையிலோ குழுவாகவோ zoom ஊடாகவோ கற்பிக்கப்படும்.

75% புள்ளிகளுக்கு மேல் பெற உத்தரவாதம்.

070 765 9269

(cs.5201) (N-1)

**வீடு விற்பனைக்கு**

சோமசுந்தரம் அவென்யூவில் 1 3/4 பரப்பு காணியில் வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய **வீடு விற்பனைக்கு உண்டு.**

தொடர்பு:- 076 116 3919

(CS/55108) J-1

**வேலையாட்கள் தேவை**

332 ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மொத்த **சில்லறை வர்த்தக நிலையத்திற்கு பொதி செய்பவர்,** Bill Clerk மற்றும் Store Keeper தேவை.

தொடர்புகளுக்கு:- 077 763 4074

(CS/55104) J-1

**வாடகைக்குத் தேவை**

யாழ் மாநகரசபை எல்லைக்குள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உணவகம் (Restaurant) ஒன்றிற்கு கடை / வீடு வாடகைக்குத் தேவை.

076 803 5352, 071 924 6420

(CS/55117) J-1

**கடை வாடகைக்கு உண்டு**

**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

**புடைவைக் கடை / பொதிகள் சேவை** மற்றும் **விசா விண்ணப்பிக்கும்** இடங்களுக்கு பொருத்தமானது.

076 071 2676

(CS/515) J-1

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் விவசாய பண்ணை ஒன்றில் வேலை செய்ய கூலி ஆள்கள் தேவை.

விவசாயம் தோட்ட வேலைகளில் அனுபமுவள்ள ஆண் / பெண் கூலி ஆள்கள் தேவை.

வயது : 25 - 60

076 287 8157

(CS/5513) N-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 06 . 1939



மறைவு 18 . 05 . 2024

## அமரசிங்கம் திலகவதி

சிவன்கோவில் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சிவலிங்கப் புளியடி மற்றும் படித்த மகளிர் திட்டம் மிருசுவிலை வதிவிட மாகவும் கொண்ட அமரசிங்கம் திலகவதி நேற்று (18.05.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமநாதன் - இராசமணி தம்பதியரின் அன்பு மிகு மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் பாசமிக மருமகளும், காலஞ்சென்ற அமரசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அன்பழகனின் அன்பு மிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான தினகரன், கலாவதி மற்றும் ரூபாவதி, கருணாவதி, நந்தாவதி, சுவேந்திரன் (சிறி), தயாவதி ஆகியோரின் பாசமிகு மூத்தசகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் படித்த மகளிர் திட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

T.P.: 077 211 4427

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L தொழினுட்பப்பிரிவு

**Techna**
Technical Institute
smart thinking leads to innovate

### புதிய பிரிவு ஆரம்பம்

### A/L 2026

19.05.2024(ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.00 மணிக்கு

**உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்**
M.விஷ்ணு P.நிரோஜனன்
**தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்**
S.சக்தி
**பொறியியல் தொழினுட்பவியல்**
S.மயூரதன்
**ICT** **கணிதம்**
T.லவன் T.சசிகரன்
**விவசாய விஞ்ஞானம்** **புவியியல்**
S.சஜீபன் S.P.கரன்

**மாணவர்கள் TECHNAவை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?**
மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு.
தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.
மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
புள்ளிகளுக்கேற்ப Z.SCORE மூலமான தரப்படுத்தல்.
பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
அனுபவம்மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்.
குழு அடிப்படையிலான செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
களப்பயணங்களை மேற்கொள்ளல்.
இறுதிப்பரீட்சையை நோக்கிய வினைத்திறனான தயார்படுத்தல்.

தொழினுட்பப்பிரிவு மாணவர்களா நீங்கள்?
உங்கள் கனவுகளை நினைவாக்க எங்களுடன் இணையுங்கள்

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.
**077 170 3549**

## வீடு வாடகைக்கு

கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் மனோகரா தியேட்டர் சந்திக்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் இடையில் **வீடு வாடகைக்கு உண்டு.** வாடகை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (CS/55123) J-1
தொடர்பு:- **077 605 7490**

## விற்பனை விநியோக முகவர் தேவை

ஆயுள்வேத மருந்து உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்கான **முகவர் தேவை.**
வயதெல்லை : 18 - 25 (CS/55096) J-1
**077 207 2647, 077 766 7444**

## கடை வாடகைக்கு

வவுனியா நொச்சிமோட்டையில், A9 வீதியில் (யாழ்ப்பாணம் - கண்டிவீதி) கடை வாடகைக்கு உண்டு.
- வவுனியா நகருக்கு 4.5 கி.மீ
- 3 கட்ட மின்சார வசதிகள்
- ஒரு மாத வாடகை - 80,000 (பேசித் தீர்மானிக்கலாம்)
- 3 ரோலர் விட்டர் கேட்ஸ்
- சொத்து அளவு - 2500 சதுர அடி
- முற்பணம் - LKR 800,00 தேவை.

(CS/28401) J-1
தொடர்பு:- **077 386 4642**

## வாடகைக்கு

இல 403 1/1 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில் (யாழ்நகரிற்கு அருகாமையில்) அமைந்துள்ள கட்டடத்தின் **முதலாவது மாடி வாடகைக்கு உண்டு. (1200 சதுர அடி)** **கல்வி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள்** நடாத்துவதற்கு ஏற்றது. வாடகை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (CS/55089) J-1
**077 210 0909, 077 242 7004**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் வரை
- தரகர் தேவையில்லை.

(CS/488) J-1
தொடர்பு :- **077 886 2927**

## சீதைக்கும் விரைவில் பிரமாண்டக் கோயில்

புதுடில்லி, மே 19
இந்திய மக்களவைத் தேர்தலில், பா.ஜ.க. மீண்டும் வெற்றிபெற்று ஆட்சியமைத்தால் சீதைக்குப் பிரமாண்டமான கோவில் கட்டப்படும் என்று அமித் ஷா தெரிவித்துள்ளார்.
பீகாரில் சீதை பிறந்த சீதா மர்ஹி நகரில் நேற்று இடம் பெற்ற தேர்தல் பரப்புரையிலேயே அமித் ஷா இவ்வாறு தெரிவித்துள்ளார்.
சீதாமர்ஹியில் சீதா தேவிக்கு பா.ஜ.க. பிரமாண்ட கோயிலை கட்டும். ராமர் கோயிலுக்குச் செல்லாமல், ஒதுங்கியவர்களால் நிச்சயமாக சீதாதேவிக்கு கோயில் கட்டமுடியாது- என்றார். (ம)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பால்பண்ணைக்கு 500m தூரத்தில் நன்னீர் ஊற்றுள்ள 2 பரப்பு **உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு.** பலாலி வீதியில் இருந்து 1Km, கம்பஸ் வளாகத்திலிருந்து 50m தூரத்தில். (CS/55075) J-1
**077 272 9827, 077 668 5097**

## உடனடி வேலை வாய்ப்புகள்

**யாழ்நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு**
**City Tex Nallur**
அனுபவம் உள்ள. பழக விரும்பும் பெண் விற்பனையாளர் உடன் தேவை.
- சம்பளம் - **35000 + Bonus**
- வயது - **18 - 25** வரை
- வேலை நேரம் - காலை - **9.00** தொடக்கம் இரவு **8.00** மணிவரை
- மதிய உணவும் கொடுக்கப்படும்.


**021 221 6185, 077 293 5537**

## காணி குத்தகைக்கு/வாடகைக்கு

யாழ் நகர மையப்பகுதியில் வெற்றுக் காணி குத்தகைக்கு / வாடகைக்கு கொடுக்கப்படும். (CS/55120) J-1
தொடர்பு: **077 070 7790**
(தொடர்பு காலை 9.00 - 5.00 வரைக்கும்)

## Spoken English Class

GCE O/L எடுத்த மாணவர்களுக்கு **SPOKEN ENGLISH & GRAMMAR** தனியாக **A/L.** பட்டதாரிகள், தொழில் புரிவோர்.
யாழ் இந்துக் கல்லூரி வீதி
K.Ganesh BA **077 766 8725**




**White House Funeral Directors, Jaffna** is looking for a **full-time manager**

- **Job Responsibilities**

1. Managing daily and monthly accounts
2. Managing cash flow in and out
3. Involvement in day-to-day office operations and management
4. Handling customers

- **Required Qualifications**

1. Aged between 35 and 60
2. Basic knowledge of accounting
3. Proficiency in Tamil and English (Proficiency in Sinhala will be an added advantage)
4. 1 year of experience in managing a shop

**Salary: Attractive Package**

Interested candidates are encouraged to contact via 0775004511 before May 31st, 2024

**White House Funeral Directors**
**Jaffna**
(cs 54897)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பண்ணை ஒன்றிற்கு ஊழியர்களை மேற்பார்வை செய்வதற்கு பயிர்ச்செய்கை, கால்நடை தொடர்பான கல்வி அறிவும் குறைந்த பட்சம் 3 வருட அனுபவமும் உடைய வேலையாள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்.
**குறிப்பு:** மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பது அவசியமானது மற்றும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
whatsapp - **076 287 8655**

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கி வரும் இலத்திரனியல் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு **விற்பனையாளர்கள் தேவை.** (CS/505) J-1
**021 222 6807, 070 304 3633**

## வாடகைக்கு / குத்தகைக்கு இடம் தேவை

காங்கேசன்துறை வீதியில் (K.K.S Road) வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் இருந்து K.K.S பக்கமாக 1 கிலோ மீற்றர் தூரத்தினுள் K.K.S வீதியோடு அமைந்திருக்கக்கூடிய ஏறக்குறைய 50 - 100 அடி முகப்புள்ளதும் 2500 - 4000 சதுர அடிக்குக் குறையாததுமான ஒரு கட்டடம் காட்சியறைக்குத் தேவை. வழங்கக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். வெற்றுக்காணி உரிமையாளர்களும் தொடர்பு கொள்ளலாம். (CS/55073) J-1
**076 968 4961**

## நாவற்குழியில் காணி விற்பனைக்கு உண்டு

நாவற்குழியில் அமிர்தா வீதியில் (அரச நெற் களஞ்சிய சாலைக்கு முன்பாக) 16 பரப்புக் **காணி விற்பனைக்கு உண்டு.** நாவற்குழி பிரதான வீதியில் இருந்து 150m தூரத்தில் அமைந்துள்ளது. (CS/54989) J-1
What's app: **077 846 6182**
Mobile : **077 711 2349**

## மானிப்பாயில் காணி விற்பனைக்கு உண்டு

மானிப்பாய் Memorial வீதியில் (Memorial பாடசாலையிலிருந்து 150 m இல்) 2 1/2 பரப்பு சுற்று மதிலுடன் கூடிய **காணி விற்பனைக்கு உண்டு.** மானிப்பாய் மருதடி ஆலயத்தில் இருந்து 500m தூரத்தில் அமைந்துள்ளது. (CS/54988) J-1
What's app: **077 846 6182**
Mobile : **077 711 2349**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சம் தஞ்சமடைந்து பாழ்பட்ட தேசத்தில்
நஞ்சென மருந்துகள் மாறி உயிர்குடிக்க
கொஞ்சமும் அதைமாற்ற துப்பில்லாதவர்கள்
கஞ்சிகொடுப்பதைக் குற்றமாக்கல் முறையாமோ?


- ஒட்டுகுழுச் சுவாமிகள்


பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2055 வைகாசி 06 ஞாயிற்றுக்கிழமை (19.05.2004) சிகரம் : 202







# பதினைந்தாவது மே 18; குற்றமாகிய கஞ்சி?

○ நிலாந்தன்

15 ஆண்டுகள் சென்றுவிட்டன. இந்தப் 15 ஆண்டுகளில் தமிழரசியலில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன?

இருந்த பெரிய கூட்டுகள் உடைந்து சிறிய கூட்டுகள் உருவாகியுள்ளன. கட்சிகளுக்குள்ளே உடைவுகள் ஏற்பட்டிருக்கின்றன.மக்கள் இயக்கங்கள் தோன்றிப் பின் மறைந்திருக்கின்றன.ஐ.நா.வில் சான்றுகளைத் திரட்டும் ஒரு பலவீனமான பொறிமுறை இயங்கிக்கொண்டிருக்கிறது.புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பில் இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக் கோரும் போராட்டத்தில் குறிப்பாக கனடாவில்.குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சில வெற்றிகள் எட்டப்பட்டிருக்கின்றன.அதேசமயம் இமாலயப் பிரகடனம் போன்ற பிரகடனங்களும் அங்கிருந்துதான் உற்பத்தியாகின்றன.

இவற்றைவிட முக்கியமாக இறுதிக்கட்டப் போரின் பின்.யார் உயிருடன் இருக்கிறார்கள்?யாருக்கு அஞ்சலி செய்யலாம்?செய்யக்கூடாது?என்ற விடயத்தில், புலம்பெயர்ந்த தமிழர்கள் மேலும் இரண்டாக உடைந்திருக்கிறார்கள். அதாவது 15 ஆண்டுகளில் ஏற்பட்ட ஆகப்பிந்திய உடைவு அது.

இப்பொழுது தொகுத்துப் பார்த்தால் மிகத்தெளிவாகத் தெரியும் சித்திரம் என்னவென்றால், கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ்மக்கள் உடைந்து கொண்டே போகிறார்கள். நினைவு கூர்தல்தான் தமிழ் மக்களை ஒரு உணர்ச்சிப் புள்ளியில் ஒன்றுகூட்டி வைத்திருக்கிறது.அதே நினைவு கூரும் விடயத்தில், தமிழ்ச் சமூகத்தில் உடைவுகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

கடந்த 15 ஆண்டுகளிலும் தாயகத்திலும் புலம்பெயர்ந்த பரப்பிலும் கட்சிகளாக, அமைப்புகளாக;குழுக்களாக;கொள்கைகளாக;பிரகடனங்களாக;ஊர்களாக;சங்கங்களாக; வடக்காக; கிழக்காக; சமயமாக; சாதியாக; இன்ன பிறவாக சிதறிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தை,நினைவு நாள்கள்தான் ஓரளவுக்காவது உணர்வுபூர்வமாக ஒன்றுகூட்டி வைத்திருக்கின்றன.அதனால்தான் அரசாங்கம் நினைவுகளைக் கண்டு பயப்படுகின்றது. நினைவின் குறியீடாக தமிழ் மக்களால் உருவகப்படுத்தப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சியை அரசாங்கம் ஒரு குற்றப்பொருளாகப் பார்க்கின்றது.

15 ஆண்டுகளுக்கு முன் உணவு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு யுத்த களத்தில்,கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்வதற்கு 'தமிழ்ச் சிவில்சமூக அமையம்' உணவையே நினைவுப்பொருளாக உபயோகித்தது. அதுதான் முள்ளிவாய்க்கால் கஞ்சி.இப்பொழுது அந்த உணவையே அதாவது. நினைவையே ஒரு குற்றமாக அரசாங்கம் பார்க்கின்றது.சில நாள்களுக்கு முன், திருகோணமலையில் உணவு ஒரு குற்றமாகக் காட்டப்பட்டது.

இறுதிக்கட்டப் போரில் ஒடுங்கிய கடற்கரைக்குள் முற்றுகையிடப்பட்டிருந்த மக்கள் மத்தியில் கஞ்சி இருந்தது;போண்டா இருந்தது;ரொட்டி இருந்தது.இதில் கஞ்சியானது தமிழ்ப் பண்பாட்டில் வெவ்வேறு பண்பாட்டு நிகழ்வுகளோடு சம்பந்தப்படுகின்றது.அது மிக எளிமையான உணவு.ஆனால் தமிழ் வீடுகளில் காய்ச்சும் கஞ்சியும் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் ஒன்று அல்ல.ஆனந்தபுரம் சண்டையோடு தேங்காய்க்குத் தட்டுப்பாடு வந்துவிட்டது. எனவே அது ஒரு பால் இல்லாத கஞ்சி. அரிசியைக் கிடாரத்தில் போட்டு நீர் விட்டு, உப்புப் போட்டு வேக வைப்பார்கள்.அரிசி வெந்ததும் அதில் இரண்டு பால்மா பக்கெற்றுகளை உடைத்துக் கரைத்து அதில் சேர்ப்பார்கள்.அதுதான் முள்ளிவாய்க்கால் கஞ்சி.அது தேங்காய்ப் பாலற்றது.பயறு இல்லாதது. ருசியற்றது.

அந்த ருசியின்மைக்குள் அதன் அரசியல் செய்தியிருக்கிறது.அந்த ருசியின்மைக்குள் ஒரு கொடிய போர்க்களத்தின் நினைவு இருக்கிறது.அந்த ருசியின்மைக்குள் இனப்படுகொலையின் பயங்கரம் இருக்கின்றது.அந்த ருசியின்மைக்குள் ஒரு சிறிய மக்கள் கூட்டத்தின் நீதிக்கான தாகம் இருக்கிறது.

அந்த ருசியின்மைதான் இனப்படுகொலையின் ருசி.அந்த ருசியின்மைதான் மரணத்தின் ருசி.கூட்டுக் காயங்களின் ருசி.கூட்டு மனவடுக்களின் ருசி.சுற்றிவளைக்கப்பட்டிருந்த தனித்து விடப்பட்டிருந்த ஒரு சிறிய மக்கள் கூட்டத்தின் கண்ணீரின் ருசி; ரத்தத்தின் ருசி.தோல்வியின் ருசி;ஒரு யுகமுடிவின் ருசி.

அந்த ருசியை தலைமுறைகள் தோறும் கடத்தும் பொழுது ஏன் அது ருசியாயில்லை என்ற கேள்வி வரும்.அந்த ருசியின்மைக்குப் பின்னால் மேலும் பல கேள்விகள் அவிழும்.ஒடுங்கிய சிறிய கடற்கரையில் ஏன் அந்த மக்கள் தனித்துவிடப்பட்டார்கள்?அருகில் இருந்த தமிழகம் ஏன் அவர்களைக் காப்பாற்றவில்லை? முழு உலகமுமே ஏன் அவர்களை காப்பாற்றவில்லை? உலகப் பெரு மன்றங்களான ஐ.நா. போன்றவை ஏன் அவர்களைக் காப்பாற்றவில்லை? அவர்களை நோக்கி அனுப்பப்பட்ட' வணங்கா மண் ' என்ற கப்பல் ஏன் வந்து சேரவில்லை? என்ற கேள்விகளை அந்த ருசியின்மை எழுப்பும்.

அந்த ருசியின்மையை தலைமுறைகள் தோறும் கடத்தும் போதுதான் நீதிக்கான போராட்டம் மேலும் வலுப்பெறும். மட்டுமல்ல, தமிழ் மக்கள் இறந்த காலத்தில் இருந்து கற்றுக் கொள்ளவும் முடியும்.

அந்த ருசியின்மைக்குள் இருக்கும் கேள்விகளை வீடுகள் தோறும் கேட்டு அதற்குப் பதில் கொடுக்க வேண்டும். மூத்த தலைமுறை அதைச் செய்ய வேண்டும். தமிழ் வீடுகளில் சாப்பாட்டு மேசைகளில்; பாடசாலைகளில்; பொது இடங்களில்; என்று எல்லா இடங்களிலும் அந்தக் கேள்விகள் கேட்கப்படவேண்டும்.அது நினைவுகளைக் கடத்தும் ஒரு பொறிமுறை மட்டுமல்ல, அதைவிட ஆழமாக அது ஓர் அறிவூட்டும் செய்முறை.அடுத்தடுத்த தலைமுறைகளும் தோற்காமல் போராட வேண்டும் என்ற உத்வேகத்தை அது கொடுக்கும்.எனவே அந்த நினைவுகளைப் பரிமாற வேண்டும். தலைமுறைகள் தோறும் கடத்த வேண்டும்.

உலகில் பொதுவாக எல்லா மக்கள் கூட்டங்களின் மத்தியிலும் கதை சொல்லும் பாரம்பரியம் உண்டு. உறங்கும் நேரக் கதைகள்;பாட்டி சொல்லும் கதைகள் என்று பலவாறாகக் கதை சொல்லும் பாரம்பரியங்கள் உண்டு.இவ்வாறு கூறப்படும் பல கதைகள் நீதிநெறிக் கதைகள். ஈழத் தமிழர்கள் அதைவிட மேலதிகமாக நீதிக்காகப் போராடவேண்டிய அவசியத்தை உணர்த்தும் கதைகளை தமது அடுத்த தலைமுறைக்குக் கூறவேண்டும். நீதிக்கான போராட்டத்தில் கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்கள் எங்கே தேங்கி நிற்கிறார்கள்?என்பதனைச் சிந்திப்பதற்கு அவர்களைத் தூண்டவேண்டும்.எனவே கஞ்சியின் மூலம் கடத்தப்படும் நினைவுகள் அல்லது கேள்விகள் எனப்படுகின்றவை,ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை நீதிக்கான போராட்டத்தின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதியாகும்.

இவ்வாறு அடுத்த தலைமுறைக்கு இறந்த காலத்தின் நினைவுகளைப் பகிர்வது, கடத்துவது என்பது பழைய காயத்தை திரும்பத்திரும்பக் கிண்டி இரத்தம்

08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(சென்றவாரத் தொடர்ச்சி)

# லக்ஷ்மன் கதிர்காமர்

# கொலை வழக்கு!



○ கே.வி.தவராசா

குற்றஒப்புதல் வாக்குமூலம் பதியப்படும் பொழுது: பொலிஸ் பரிசோதகர் ரங்கநாதன் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி மதியம் 14.30 மணிக்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் இரண்டாம் எதிரிக்கும் சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்பாளராகச் செயற்பட்டார் என அரசதரப்பால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் உண்மைக்குப் புறப்பானவை என்று நீதிமன்றில் சாட்சியங்கள் மூலமும் ஆவணங்கள் மூலமும் எதிரி தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்தேன்.
எதிரி தரப்பால் நீதிமன்றில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதியப்பட்டதாக அரசதரப்பால் கூறப்படும் அதேநாளில் அதேநேரத்தில நகுலா பத்மநாதன் என்ற வேறு ஒரு கைதியின் வாக்கு மூலத்தை பொலிஸ் பரிசோதகர் ரங்கநாதன் பதிவு செய்துள்ளார் என்பதனை உறுதிப்படுத்தும் ஆவணமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஒரேநாளில் ஒரேநேரத்தில் இருவேறு கைதிகளின் வாக்குமூலங்களை ஒரேநபர் பதிவு செய்வது சாத்தியமில்லை என்பதால், பொலிஸ் பரிசோதகர் இரங்கநாதனின் சாட்சியம் உண்மைக்கு புறம்பானதென்பதாலும், எதிரியின் உடலில் பொலிஸாரினால் சித்திரவதை செய்தமைக்கான காயங்கள் சட்ட மருத்துவ அதிகாரியின் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாலும், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பில் வழங்கப்பட்டதல்ல என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளதாலும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரிக்கும்படி வாதாடினேன். இரு தரப்பினரதும் வாதப் பிரதிவாதங்களை யடுத்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபயக்கோன் 'எதிரியால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பில் வழங்கப் படவில்லை' எனக் கட்டளை வழங்கினார்.

## தவராசாவே எனது சட்டத்தரணி

இடைப்பட்ட காலத்தில் நான் சிங்கப்பூரில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த போது வழக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டிருக்கின்றது. அப்போது ஆரோக்கிய நாதனைப் பார்த்து நீதிபதி "உமக்கு வேறு ஒரு சட்டத்தரணியை வைத்துக்கொள்ளும்" என்ற போது அவர் "எனது சட்டத்தரணி தவராசாவேதான், 12 அல்ல 24 வருடங்கள் நான் சிறையில் இருக்க நேர்ந்தாலும் பரவாயில்லை, அவர் சுகம்பெற்று வந்து எனக்காக வாதாடி விடுதலை பெற்றுத் தருவார்" என்று உறுதியாகக் கூறியதை நீதிபதி பின்னொருநாளில் என்னிடம் விதந்து கூறினார்.
ஆரோக்கியநாதனின் நம்பிக்கை வீண்போகவில்லை. விரைவாகவே நான் குணமடைந்து வந்து அவருக்காக ஆஜராகினேன். இறுதியில் அவரும் 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விடுதலையானார்.

## கதிர்காமரோடு நட்பு; கைதான ஞானக்கோன்

1993ஆம் ஆண்டே தனது குடும்பத்தாருடன் அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்தவர் சாள்ஸ் செல்வகுமார் ஞானக்கோன். அவர் அப்போதைய வெளிநாட்டலுவல்கள் அமைச்சரான லக்ஸ்மன் கதிர்காமரின் நண்பரும் கூட. தெஹிவளை இலக்கம் 36, நிக்காபே வீதியில் அமைந்திருந்த குடிமனையில் அவுஸ்திரேலியப் பிரஜையான அரசசார்பற்ற அமைப்பைச் சார்ந்த கார்தசியன் ஸ்டோக் (Carcasian Stock) என்பவருடன் வசித்து வந்ததுடன் அம்பாந்தோட்டையில் அரசசார்பற்ற அமைப்புப் பணிகளிலும் ஞானக்கோன் ஈடுபட்டிருந்தார்.
லக்ஸ்மன் கதிர்காமர் கொலைச் சம்பவத்தில் தொடர்புபட்ட விடுதலைப்புலிகள் ஞானக்கோனுடன் தங்கியிருப்பதாக இராணுவத்துக்கு ஒரு தகவல் கிடைத்தது. அதனையடுத்து இராணுவத்தினர் 2005.10.05 திகதி அந்த வீட்டைச் சுற்றிவளைத்து அங்கு தங்கியிருந்த கார்தசியன் ஸ்டோக்கிடம் சில கேள்விகளைக் கேட்டனர். பின்னர் கதிர்காமரின் நெருங்கிய நண்பரான அவுஸ்திரேலியப் பிரஜையான சார்ள்ஸ் செல்வகுமார் ஞானக்கோனை அந்த வீட்டிலிருந்து கைது செய்து தெஹிவளை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

## கதிர்காமர் கொலை செய்யப்படமாட்டார்

'ஞானக்கோன் கதிர்காமருடன் நண்பராகி அவர் கொலை செய்யப்படமாட்டாரென அவருக்கு உறுதியளித்து, அவரது பாதுகாப்பை தளர்த்துவதற்குத் தூண்டினாரென குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்' என்று இலங்கை ஊடகங்கள் அறிக்கையிட்டன. ஞானக்கோனை கைது செய்த தெஹிவளை பொலிஸார் மேலதிக விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் விசாரணை நடத்திய பின்னர், இறுதியாக பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கமைய கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவிடம் ஞானக்கோனை கையளித்து விசாரணைகள் நடத்தப்பட்டன.

## கதிர்காமர் எனது நெருங்கிய நண்பன்

கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரது விசாரணையின் போது ஞானக்கோன் தனது வாக்கு மூலத்தில் , "முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் எனது நெருங்கியநண்பர். எனக்கும் புலிகளுக்குமிடையே எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் நான் தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டவன். நான் கதிர்காமரின் நண்பர் என்பதற்காக புலிகள் எனக்கு ஓர் அச்சுறுத்தலும் விடவில்லை' எனவும் குறிப்பிட்டிருந்தார்.
கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் , ஞானக்கோனை 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை நடத்த பாதுகாப்புச் செயலாளரிடம் இருந்து தடுப்புக் காவல் உத்தரவை பெற்றிருந்தனர். இந்த நிலையில் 2005.10.24 ஆம் திகதி முதல் அறிக்கை ஒன்றினை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசலா வீரவர்த்தன முன்னிலையில் தாக்கல் செய்திருந்தனர்.
இராணுவத்துக்கு கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையிலேயே அவுஸ்திரேலியப் பிரஜையான ஞானக்கோனை கைது செய்ததாகவும் , தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைத்து விசாரணைகள் நடைபெறுவதாகவும், அவுஸ்திரேலிய பிரஜையான ஞானக்கோனின் கடவுச்சீட்டை நீதிமன்றுக்கு சமர்ப்பிப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## ஆட்கொணர்வு மனுதாக்கல்

கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஞானக்கோன் விரைவாக விடுதலையாகும் சூழ்நிலை காணப்படாததினால் மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆட்கொணர்வு மனுவொன்று சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஞானக்கோன் கடும் சுகவீனத்துக்கு ஆளானதால், நவலோக மருத்துவமனையின் அவசரச் சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு, அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.
2005.12.19 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது கதிர்காமர் கொலையில் மனுதாரரான ஞானக்கோனுக்கு எதிராக எந்தச் சான்றும் அரச தரப்பினரால் முன்வைக்கப்படாத நிலையில் ஞானக்கோன் விடுதலை செய்யப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட ஞானக்கோன் ஊடகவியலாளர்களிடம் , "எந்தக் குற்றமும் புரியாத என்னை 55 நாட்கள் தடுத்து வைத்தனர். விசாரணை மேற்கொண்ட பொலிஸார் என்னை மனதாபிமானத்தோடு நடத்திய போதிலும் உளவியல் ரீதியான சித்திரவதைக்கும் தாக்கத்துக்கும் உள்ளாக்கினர். புலிகளுடன் எந்தவிதமான தொடர்பும் இல்லாத எனது விடயத்தில் அவுஸ்திரேலிய அரசாங்கம் அக்கறை எடுத்திருந்தால் நான் முன்னரே விடுதலையாகியிருக்கலாம் எனக் குறிப்பிட்டார்.

(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி



விசும்பின் துளி வீழின் அல்லால்...


## புலமையாளர் பதில்

**கேள்வி:** இன்று மேக வித்திடல் (Cloud Seeding) பற்றிப் பரவலாகப் பேசப்படுகிறது. மேக வித்திடல் என்றால் என்ன? அது தொடர்பான மேலதிக விளக்கத்தை வழங்க முடியுமா?

*(பி. சதுர்சன், கொக்குவில் இந்துக் கல்லூரி)*

**பதில்:** மேக வித்திடல் என்பது செயற்கை மழை உருவாக்கத்தோடு தொடர்புடைய பதமாகும். ஒரு பிரதேசத்தில் வளிமண்டலவியல் வரட்சி, நீரியல் வரட்சி காணப்படும் சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற பாதிப்புகளைக் குறைப்பதற்காக செயற்கை மழை உருவாக்கம் நடைபெறுகிறது. இது மூன்று பிரதான செயன்முறைகளோடு தொடர்புடையது. ஒன்று குறிப்பிட்ட பிரதேசத்தில் மேகங்களை உருவாக்குவதற்காக முகில்களை உருவாக்குதலாகும். இதற்காக பொருத்தமான வானூர்தி மூலம் கல்சியம் காபைட்டு, கல்சியம் ஒட்சைட்டு, யூரியா உப்பு அல்லது அமோனியம் நைத்திரேற்று போன்ற இரசாயனப் பதார்த்தங்களைத் தூவுவதன் மூலம் மழைபெய்ய வேண்டிய பிரதேசத்தில் முகில்களை உருவாக்குதல். இரண்டாவது படிமுறையாக மழைபெய்ய வேண்டிய பிரதேசத்தில் குறைவான முகில்கள் காணப்பட்டு அவை மழை உருவாக்குவதற்குத் தேவையான நிலைமைகள் காணப்படாவிட்டால் அப் பிரதேசத்தில் அதிகளவான முகில்களை உருவாக்கி மழை பெய்யச் செய்தல். இறுதிப் படிமுறையில் குறிப்பிட்ட பிரதேசத்தில் அதிக முகில்கள் உருவாகினாலும் அவை குளிர்வடைந்து மழை பொழியாத சந்தர்ப்பத்தில் அம் முகில்களை குளிர்வடையச்செய்து மழை பொழிவிப்பதற்காக முகில்களின் மீது வெள்ளி அயோடைட்டு, உலர்பனி போன்றவற்றைத் தூவுவதன் மூலம் வாயு நிலையில் இருக்கும் முகில்களை திரவ நிலைக்கு மாற்றி மழையாக பொழிவதற்குரிய செயற்பாடுகள் மேற்கொள்ளுதல் ஆகும். உலகம் முழுவதும் காணப்படுகின்ற அதிகளவிலான செயற்கைமழை உருவாக்கத்தில் இம் மூன்றாவது செயன்முறைதான் மேற்கொள்ளப்படுகிறது.

மத்திய கிழக்கு நாடுகள் வரட்சி, பாலைவன நிலத்தன்மை கொண்டவை. ஆனால் இன்று அவை பொருளாதார வளம் மிக்க நாடுகளாகக் காணப்படுகின்றமையால் மேக வித்திடல் செயன்முறையை அவை கிரமமாக மேற்கொள்கின்றன. தாய்லாந்திலே இதற்காகத் தனியான திணைக்களம் அமைக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டுகளில் நீர் மின்னுற்பத்தி தடையறாமல் நடப்பதற்காக இலங்கையும் கூட இவ்வழிமுறை மூலம் மழையைத் தூண்டுவதற்கு முயற்சி செய்திருக்கிறது.



**கலாநிதி. நா. பிரதீபராஜா**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## இளையோர் பார்வை



### இணைவோம்!

பொழுதெல்லாம் பொசுங்கி விடும்
பொலித்தீன் மட்டும் உயிர் வாழும்
நீரெல்லாம் வற்றி விடும்
தாகம் மட்டும் ஊற்றெடுக்கும்
துர் காற்று தூது வரும் நாம்
மாளும் சேதி காவி வரும்
வானம் பார்த்து இறைவா என்போம்
ஒருவரையொருவர் மிதித்துக் கொல்வோம்
தீயாய் மரணம் சீறி வரும்
இது தான் நம் எதிர்காலம்
கடந்தகாலம் கடந்து விட்டோம்
நிகழ்காலம் அதற்கு நிகரில்லை
எதிர்காலம் பற்றிய பதிலே இல்லை
மாற்றம் ஒன்றே மாறாதது
மாற்றி விடுவோம் பூலோகத்தை
வாழ வைப்போம் வருங்காலத்தை
இயற்கை அன்னையுடன் இணைந்து..

**அ. அதிர்வாணன்,**
மல்லாவி



அக்கம் பக்கம்

## பூநகரியில் நாரா நிலையம்

தேசிய நீர்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை முகவராண்மை தனது பிராந்திய ஆய்வு நிலையமொன்றைக் கடந்த மாதம் பூநகரியில் ஆரம்பித்து வைத்திருக்கிறது. வடமாகாணத்திலே நீருயிர்வளத்துறையைப் பேணுதல், முகாமை செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களைக் கருத்தில் கொண்டே இந்நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் வடமாகாணத்தின் நீருயிர் வளம் காணப்படும் சூழல் தொகுதிகளின் சமநிலையைப் பேணுவதோடு மட்டுமல்லாமல் மாகாணத்தின் நிலைபேறான சமூக பொருளாதார அபிவிருத்திக்கும் இப்பிராந்திய ஆய்வு நிலையம் தன் பங்களிப்பைச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்தமாத அமர்வு

## தணிப்பதும் தவிர்ப்பதும்!

கடந்த மாதம் 25 ஆம் திகதியன்று நிகழ்நிலை அமர்வில் நடைபெற்ற வடமாகாண நீர் வாண்மையாளர்களின் உரையாடல் வட்டத்தில் காலநிலை மாற்றம் மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகள் தொடர்பாக உரையாடப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா. பிரதீபராஜா அவர்கள் பிரதம உரையாளராக கலந்துகொண்டு தற்போதைய காலநிலை மாற்றத்தின் தீவிரத்தன்மை, அதற்கான காரணங்கள், அதன் விளைவுகள் பற்றி எடுத்துரைத்தார்.

Yale Environment 360 சஞ்சிகையின் கருத்தின் பிரகாரம் அண்மைய இருபது ஆண்டுகளில் வானிலை சார்ந்த தோற்றப்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்துகிற அளவுக்கு காலநிலை மாற்றத்தின் அதிதீவிர தன்மை உணரப்படுகிறது. உலகளாவிய ஆபத்து நிலைச் சுட்டியின் (Global Risk Index) 2023 ஆம் ஆண்டின் அறிக்கையின் படி காலநிலை மாற்றத்தின் பாதிப்புக்கு உட்படுகின்ற நாடுகளில் இலங்கை நான்காவது இடத்தைப் பிடித்திருப்பதாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.


இன்றைய சூழ்நிலையில் உலகளாவிய ரீதியில் பாரியளவு செல்வாக்கு செலுத்துகிற விடயமாகக் காலநிலை மாற்றம் உள்ளது. பூகோள வெப்பமாதல், பச்சைவீட்டு விளைவு போன்ற பல செயற்பாடுகளின் தொடர்ச்சித் தன்மையின் விளைவாகவே காலநிலை மாற்றம் குறிப்பிடப்படுகிறது. வானிலை நிகழ்வுகள் வழமையான வானிலை நிகழ்வுகளை விட மிகப் பெரிய அளவில் பாதிப்பை பொருளாதார, சமூக, இயற்கை, உயிரிழப்பு ரீதியாகவோ ஏற்படுத்தினால் அவற்றை அதிதீவிர வானிலை நிகழ்வுகளாகக் குறிப்பிடலாம். வெப்ப அலைகள், வரட்சி, காட்டுத்தீ, வெள்ளம், தீவிரமான புயல் போன்றவையும் அவற்றில் அடங்குவன.

இன்றைய நாட்களில் நமது நாட்டில் வெப்ப அலைகளின் தீவிரத்தன்மை காரணமாக வெப்பத்தினால் மக்கள் பாரியளவு இடர்பாடுகளை எதிர்கொள்கிறனர். மனித செயற்பாடுகளால் இயற்கை சமநிலை சீர்குலைந்தமையே இவை யாவற்றுக்கும் காரணமாக விளங்குகிறது. இனிவரும் சூழலில் அனைவரும் விழிப்படைந்து செயற்படுவதன் மூலம் மட்டுமே காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளைத் தணிக்க முடியும்.

## கிளிநொச்சியை நோக்கிய களப்பயணம்

### அறைகூவல்!

மே மாதத்துக்கான உரையாடல் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள களப்பயணத்தை உள்ளடக்கியதாக எதிர்வரும் வியாழக்கிழமை 23 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. நீங்களும் பங்குபற்றலாம். விவரங்களுக்கு மின்னஞ்சலூடாக எங்களை அணுகுங்கள்.



வடமாகாணத்து நீர்வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
*Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna.*
மின்னஞ்சல்: [illegible]
துளி [illegible] சஞ்சீவியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கடங்கள் தருபவரே...

சியாமளா யோகேஸ்வரன்

“வாசுகி, வாசுகி” ஏலம் போடுவதற்கு இணையாகக் கூப்பிட்டுக் கொண்டிருந்த கணவன் சீலனின் குரல் வாசுகிக்கு இதயத்தில் சம்மட்டி கொண்டு ஓங்கி அடிப்பது போன்றிருந்தது. ஒரு ஐந்து நிமிடம் கூட தனக்கென்று இல்லை என்பதில் வாசுகிக்குக் கோபம் வந்தது. தன் கவலைகளில் மூழ்கித் தன் சிந்தனைகளில் ஆழ்ந்திருக்கத் தனிமை கிடைக்காத வாழ்வின் மீது வெறுப்பு வந்தது. ஆனாலும் சலிப்புடன் எழுந்து சீலனின் குரல் வந்த திசைநோக்கி, வீட்டின் பின்புறத்தை நோக்கிச் சென்றாள்.

“எதுக்கப்பா இப்ப என்னைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறியள்? கொஞ்ச நேரம் நிம்மதியாக இருக்க விடமாட்டியளே?” குரலிலேயே வாசுகியின் மனநிலையைப் புரிந்து கொண்டுவிட்டான் சீலன். இந்த இருபது வருட கால மணவாழ்க்கையில் இதைக் கூடப் புரிந்து கொள்ளாவிட்டால், இத்தனை காலம் சேர்ந்து வாழ்ந்து தான் என்ன பொருள்? தன் உணர்வுகளைப் புரிந்து கொள்வதில்லை என்று வாசுகி அடிக்கடி அவன் மேல் குறை சொல்லிக் கொண்டிருப்பதில் தவறில்லை என்பது சீலனின் உள்மனம் ஒப்புக் கொண்டு விட்டிருந்தது. கணக்குப் போட்டா பெண்களின் குணம் மாறிக் கொள்கின்றது? பெண்களின் மனதை ஆண்கள் அறிந்து விடக் கூடாது என்ற விதிக்கமையவே பெண்படைப்பு நிகழ்ந்திருக்கின்றது என்பது அவனின் முடிந்த முடிவு.

இப்போது வாசுகியின் ‘மூட்’ சரியில்லை என்று தெரிந்திருந்தால் கூப்பிட்டே இருக்கமாட்டான். அவளிடம் வாயைக்கொடுத்து, வாங்கிக் கட்டிக் கொண்டு ஞாயிறு விடுமுறை நாளைக் கெடுத்துக் கொள்ள விரும்பாமல் குரலில் மிகுந்த பணிவை வரவழைத்துக் கொண்டான்.

“இஞ்சரப்பா, உந்த மரம் வெட்டுற குறடு கராஜிலை இருக்குது எடுத்துக் தாறீரே?”

“ஏனப்பா, உங்களை இப்ப உந்த மரத்தை வெட்டேல்லை என்று யார் அழுதது? நானே கவலையில் இருக்கிறன், உங்களுக்கு வாழ்க்கையிலை ஒண்டைப் பற்றியும் கவலை இல்லைத்தானே?” பேச்சு இன்னமும் நீண்டு கொண்டு போகும் என்பதையும், தேவையில்லாமல் வில்லங்கத்தை வாங்கிக் கொண்டு விட்டோமென்பதையும் சீலன் புரிந்து கொண்டான்.

“ஏனப்பா இப்ப உமக்கு என்ன கவலை? தனியே இருந்து ஏன் யோசிச்சுக் கொண்டிருக்கிறீர்?”

“இஞ்சரப்பா, உங்களுக்கு வீட்டைப் பற்றித் தான் அக்கறையே தவிர, அதில் வாழுற மனிசரைப் பற்றி எந்தக் அக்கறையுமில்லை.”

“சரியப்பா, உமக்கு இப்ப என்ன கவலை?”

“நாளைக்கு உவன் பொடியனிண்ட றிசல்ட் வருகுதெல்லே?” ஏக்கம், பதற்றம், எதிர்பார்ப்பு, கவலை எல்லாமே வாசுகியின் குரலில் இருந்தன.

“அது நாளைக்குத் தானே? வர்றப்ப வரட்டும், ஏன் இப்ப இருந்தே நீர் அதைப் பற்றிக் கவலைப்படத் தொடங்கிட்டீர்?”

“என்ன றிசல்ட் வரப்போகுது எண்டே தெரியேல்லை, நல்லாத் தான் படிச்சவன், நல்லாத் தான் செய்தன் என்று சொன்னவன், ஆனால் சில வேளை காலம் பிழைச்சிடும். எனக்கு என்னமோ பயமாயிருக்குது.” தன் கவலையைக் கொட்டியவள், சட்டென ஞாபகம் வந்தவளாக,

“எனக்கு என்ன கவலை என்று கேட்டனியளோ? உங்களுக்கு ஒண்டையும் பற்றி ஒரு கவலையும் இல்லைத் தானே? எல்லாத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்யவும் கவலைப்படவும் நான் ஒருத்தி தானே இங்க இருக்கிறன்.” பொரிந்தாள் வாசுகி.

அவள் சொல்வதில் எள்ளளவு கூட உண்மையில்லை என்றாலும் வாக்குவாதப்படப் போய் தோற்றுப் போகாமல் மரியாதையாக ஒதுங்கிக் கொள்வதே நலம் என்று தீர்மானித்தவனாக,

“நல்ல றிசல்ட்தான் வரும், நீர் தேவையில்லாமல் கவலைப்படாதேயும்.” சொல்லி விட்டு அவள் அடுத்த கதையை வளர்க்க முன்னர் தனக்குத் தேவையானதை எடுத்துக் கொள்ளும் பொருட்டு கராஜுக்குள் வேகமாகப் புகுந்து கொண்டான் சீலன்.

அன்று முழுவதும் வாசுகியின் பக்கம் போகாமல் இருப்பதற்காக சீலன் பெரும் பிரயத்தனப்பட்டான். மகனின் பன்னிரண்டாம் வகுப்புக்கான றிசல்ட்டை



மகனின் பன்னிரண்டாம் வகுப்புக்கான றிசல்ட்டை மனைவி பதற்றத்துடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றாள் என்பது அவனுக்குத் தெரியும்.

சஞ்சீவி **சிறுகதை**

மனைவி பதற்றத்துடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றாள் என்பது அவனுக்குத் தெரியும். அந்தப் பதற்றத்தை எப்படி வெளிக்காட்டுவது என்று தெரியாமல் தவிக்கும்போது குறுக்கே புகுந்து மாட்டிக் கொண்டு விடாமல் இருப்பதுதான் தனக்குப் பாதுகாப்பு என்பது அவனுக்கு நன்றாகவே புரிந்திருந்தது. அதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. வாசுகி மருத்துவம் படிக்க வேண்டும் என்ற தீராக்கனவுடன் எத்தனை ஆவலாகக் காத்திருந்தாள் என்பதையும் மூன்றே புள்ளிகளால் அந்த மருத்துவக்கற்கை வெறும் கனவாகப் போய் விட்டதையும் அதனால் தேற்ற முடியாத அளவுக்கு மனம் உடைந்து போனாள் என்பதையும் சீலன் அறிவான். அவளின் கைக்கெட்டாத கனவை மகனாவது எட்டிப் பிடித்து விட வேண்டும் என்பதற்காக அவனுக்குப் பார்த்துப் பார்த்துப் படிப்பித்திருந்தாள். சீலன் பொறியியல் படித்திருந்தும் அவனுக்கு எதுவும் தெரியாது என்பது போலவும், பொறியியல் கற்கைநெறி வெகு இலகு என்பது போலவும் அவனை அவ்வப்போது மட்டம் தட்டியும் வைத்துக் கொள்வாள்.

மகன் சுஜந்தனும் படிப்பில் வெகு கெட்டிக்காரன். வாசுகி ஆசைப்பட்டது போன்றே வகுப்பில் புத்திசாலிப் பையனாக ஜொலித்தான்.

கேடயங்களையும் பரிசில்களையும் வருடந்தோறும் வாங்கிக் குவித்தான். வாசுகி ஒரு பரிசளிப்பு வைபவத்தையும் தவற விட்டதில்லை. பரிசளிப்பு முடிந்த கையோடு கேடயங்களைத் தாங்கிய மகனோடு நின்று புகைப்படம் எடுத்து முகநூலில் தன் பெருமை பற்றி விளக்கமாக எழுதிப் போட்டு விடுவாள். அத்தனையும் தன் படிப்பிப்பும், தன் மூளையும் என்று சீலனையும் சீண்டிப்பெருமை பேசுவாள். இதனால் ஊருக்கு மட்டுமல்ல நண்பர்கள் வட்டத்துக்கும் சுஜந்தன் கெட்டிக்காரன் என்பது தெரியவந்திருந்தது. இவர்கள் [illegible] மருத்துவர் என்று பேசிக் கொள்ளும் போது கிடைக்கும் பெருமையையும் அதனால் கிடைக்கும் கர்வத்தையும் அனுபவித்தாள்.

பின்புலத்தில் இத்தனை நடந்திருக்க, மகனின் பெறுபேற்றுக்காகக் காத்திருக்கும் வாசுகியின் உளம் படும் பாட்டை விபரிப்பதற்கு வார்த்தை ஏது? இரவு சுவாமி அறையில் நீண்ட நேரம் அமர்ந்திருந்து கண்களை மூடி வேண்டிக்கொண்டிருந்தாள் வாசுகி. அதன் பின்னரும் அவளால் தூங்கமுடியவில்லை என்பதை அடிக்கடி வெளியேறிக் கொண்டிருந்த பெருமூச்சின் ஒலியும், புரண்டு படுத்த போதான கட்டிலின் அசைவும் உணர்த்திக் கொண்டிருந்தன. அதிகாலையில் தூக்கம் கலைந்தபோது பக்கத்தில் படுத்திருந்த வாசுகியைக் காணவில்லை. போனை எடுத்து நேரத்தைப் பார்த்தால் மணி நான்கு. எங்கு போயிருப்பாள் என்ற யோசனையுடன் எழுந்த சீலன் முதல் தேடலாக சாமி அறைக்குள் தான் எட்டிப் பார்த்தான்.

சுவாமி விளக்குக் கொளுத்தப்பட்டிருக்க கண்களை மூடி அமர்ந்திருந்த வாசுகியின் கண்களில் கண்ணீரைப் பார்த்ததும் சீலன் பதறி விட்டான். வாசுகியின் உலகமே மகனும் கணவனும் தான் என்பதை அவன் நன்கறிவான். இவர்களுக்காகத் தன்னை வருத்திக் கொண்டு வீட்டு வேலைகளிலோ, சாப்பாட்டிலோ, கவனிப்பிலோ எந்தக் குறையும் வைக்காமல் அன்பால் குளிப்பாட்டுபவள். இயலாமையில் வரும் சிடுசிடுப்பைத் தவிர இயல்பிலேயே நல்லவள்.

“ஏனம்மா, அழுறாய்?” கணவனின் குரலால் திடுக்கிட்டுக் கண்களை விழித்தவள் அருகில் அமர்ந்திருந்த அவன் தோள்களில் சாய்ந்து கொண்டு விசும்பினாள்.

“பயமாயிருக்குதப்பா, என்னை மாதிரியே அவனுக்கும் நடந்திடுமோ என்று பயமாயிருக்குது.”

“வர முன்னரேயே எதுக்குக் கற்பனையில் பயப்படுகிறாய்?” தேறுதலாகச் சொன்னாலும் அவள் மனதுக்கு என்னமோ தோன்றி விட்டதோ என்று சீலனுக்குள்ளும் ஒரு அச்சம் தோன்றாமல் இல்லை. சுஜந்தன் எதைப்பற்றியும் கவலைப்படமாட்டான். அவன் வெளிநாட்டில் வளர்ந்த பிள்ளை. எதுவானாலும் தைரியமாக எதிர்கொள்வான். வாசுகியைத் தான் தேற்ற முடியாது. மகனுக்காகவே ஆயிரம் விரதங்களைப் பிடித்துக் கொண்டு பாதி நேரம் கோயிலே கதி என்று கிடப்பவள் எப்படி உடைந்து போவாள் என்பதை நினைக்கவே அச்சமாக இருந்தது. கடவுளிடம் ‘நல்ல றிசல்டைக் கொடுத்து விடப்பா ’என்று சீலனும் மானசீகமாக வேண்டிக் கொண்டான்.

பலர் சொல்வது போல் கடவுள் கல்தானா அல்லது கண்களை அவ்வப்போது மூடிக் கொள்பவனா அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கெனவே எழுதி வைத்த விதியை மாற்ற முடியாதா என்பது தெரியவில்லை. கடவுள் பக்தையான வாசுகியின் வேண்டுதலோ அல்லது தேவைக்குத் தொழும் சீலனின் வேண்டுதலோ பலிக்கவில்லை. சுஜந்தனின் றிசல்ட் நல்லவிதமாக வந்திருந்தாலும் அது மருத்துவக் கற்கைநெறியை உறுதிப்படுத்துவதற்கான உயர் நிலையில் வந்திருக்கவில்லை என்றவுடன் வாசுகி உடைந்து போய் அழத் தொடங்கி விட்டாள். சுஜந்தனோ ஏதோவொரு பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைத்துவிடும் என்று தாய்க்கு ஆறுதல் கூறி விட்டுத் தன் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கி விட்டான். சாப்பிட மறுத்து அழுது கொண்டிருக்கும் வாசுகியை எப்படி ஆறுதல் படுத்துவது என்பது தெரியவில்லை.

"வாசுகி, அவன் நல்ல றிசல்ட் தான் எடுத்திருக்கிறான். இரண்டு கிழமையில் என்ன படிக்கலாம் என்று வந்து விடும். எப்பிடியும் கிடைக்கும் என்று சொல்லுறான். நீர் ஏன் கவலைப்படுறீர்?" கணவனின் வார்த்தைகள் ஆறுதலைக் கொடுக்க, முகநூலைத் திறந்தாள்.

அவளுக்குத் தெரிந்த இரண்டு பிள்ளைகள் பூரணமான புள்ளிகளைப் பெற்றிருந்தார்கள் எனப் பெற்றோர் பதிவிட்டு இருந்தனர். அதைப் பார்த்ததும் வாசுகியின் மனம் சோர்ந்து போனது. ஏன் என்னை மட்டும் கடவுள் இப்படிச் சோதிக்கின்றார் என்று மனதுக்குள் அழுது கொண்டாள். இப்போது பார்ப்பவர்கள் எல்லோரும் றிசல்டைப் பற்றிக் கேட்கப் போகிறார்களே என்பதால் வெள்ளிக்கிழமை வழமையாகக் கோயிலுக்குப் போகின்றவள் அன்று போகாமல் தவிர்த்தாள். சனிக்கிழமை அடுத்த மாநிலத்தில் இருக்கும் சீலனின் நண்பன் குடும்பம் ஒன்று வருகை தருவதாக சொல்லியிருந்தார்கள். வாசுகிக்கு அவர்களை வரவேற்கும் மன நிலையோ அல்லது அவர்களுக்காக எதுவும் தயாரிக்கும் மன நிலையோ இருக்கவில்லை. உடலும் மனமும் கனக்க எதையோ சமைத்து முடித்தாள். வலிந்து புன்னகையைப் பூசிக் கொண்டு வரவேற்றாலும் அவர்களுடன் இணைந்து பேசவோ சிரிக்கவோ முடியாமல் சிரமப்பட்டாள். வந்தவர்களுக்கு என்னமோ தோன்றியிருக்கும் போல் அதிக நேரம் தங்காமல் கிளம்பி விட, உள்ளுக்குள் வலித்தது. உள்ளுக்குள் இதயம் ஏமாற்றத்தால் நொருங்கிப் போயிருக்க, பொய்யாகச் சிரித்து வேடம் போடவும் முடியாமல் மற்றவர்களுக்குத் தன்னிலை பற்றி விளக்கம் கொடுக்கவும் முடியாத நிலை பரிதாபத்துக்குரியது.

ஞாயிற்றுக்கிழமை சதுர்த்தி என்ற போதும் வாசுகிக்குக் கிளம்ப மனம் வரவில்லை. எந்தத் திருவிழாவையும் இது வரையில் அவள் தவற விட்டதில்லை. "வாசுகி, வாரும் கோயிலுக்குப் போயிற்று வருவம். போகேல்லை என்றால் எல்லாரும் ஏதாவது நினைப்பினம்" சீலனின் கூற்றில் நியாயம் இருக்க, வாசுகிக்குக் கிளம்புவதைத் தவிர வேறு மார்க்கம் ஏதும் இருக்கவில்லை. பட்டுச்சால்வை கட்டி மலர்மாலைக்குள் கம்பீரமாக அமர்ந்திருந்த பிள்ளையாரைப் பார்த்ததுமே வாசுகியின் கண்கள் கசியத் தொடங்கி விட்டன.

"ஏன் கடவுளே என்னை இப்படிச் சோதிக்கின்றீர்? கேட்டதெல்லாம் தருபவர் என்று உன்னையே நம்பியிருந்தேனே?" கண்களில் ஒரு சொட்டுக் கசியவும் பக்கத்திலிருந்த சுஜி இவளைப் பார்த்துக் கொண்டிருப்பது புரியவும் சரியாக இருந்தது. எழும்பி அவசர அவசரமாகக் கோயிலை வலம் வரத் தொடங்கினாள். சாமி வலம் வரும் போது புதினம் அலசுபவர்களிடம் அகப்பட்டு விடுவோமோ என்ற பயத்தில் வெளிவீதி சுற்றுவதைத் தவிர்த்தாள். அமைதியாக இருந்த கோயிலுள் இறைவனின் தரிசனம் அவளது ஆற்றாமையைக் கிண்டிவிட அவரிடம் மனதுக்குள் முறையிட்டு நீதி கேட்டாள். யாராவது பக்கத்தில் வருகிறார்கள் என்றாலே அந்த இடத்தை விட்டு ஓட்டம் பிடித்தாள். ஒருமாதிரியாக வீட்டுக்கு வந்து சேர்ந்ததும் தான் அப்பாடி என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

அடுத்த வாரம் ஒரு திருமணம் இருப்பது திடீரென ஞாபகத்துக்கு வந்தது. சுஜந்தனுக்கு என்ன கிடைக்கப்போகின்றது என்பது தெரியவில்லை எனச் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் என்ன றிசல்ட் என்று கேட்டால் என்ன சொல்வது என்பது தெரியாததால் சீலனிடம் தான் திருமணத்துக்கு வரவில்லை என்று மறுப்புத் தெரிவித்தாள்.

"அதெப்படி? நீர் வராவிட்டால் தான் எங்கப்பன் குதிருக்குள்ள இல்லை என்று சொன்னது போல இருக்கும். பேசாமல் வாரும்" சீலன் சொல்லிக் கொண்டிருக்கையில் காதுக்குள் பாட்டுப் போட்டுக் கேட்டபடி தலையை ஆட்டிக் கொண்டு வந்த சுஜந்தன் கண்ணில் பட்டான்.

"ஒழுங்கா படிக்கத் தெரியேல்லை, உந்தப்பாட்டைப் போட்டு அழிஞ்சதுதான் மிச்சம். எல்லா வகுப்புக்கும் எவ்வளவு காசைக் கட்டி கஷ்டப்பட்டுப் படிப்பிச்சனாங்கள். ஒழுங்கா படிச்சால் தானே?" மகனுடன் பாய்ந்தாள். அவன் கலங்கி விட்ட கண்களுடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

"உங்கட வாயைத்தான் புடுங்குவினம், வாயைத் திறந்து போடாதேங்கோ." கணவனை ஒரு மிரட்டலுடன் எச்சரித்து வைத்து விட்டு பலிக்கடா மனநிலையுடன் தான் கல்யாணத்துக்கு கிளம்பினாள். எந்த மேசை என்று பார்த்ததுமே திக்கென்று இருந்தது. புதினம் புடுங்கி அகல்யா இவர்களின் மேசைதான். எதிர்பார்த்தது போலவே ஓடவும் முடியாத ஒளியவும் முடியாத ஒரு நிலையில்

"சுஜந்தனுக்கு என்ன றிசல்ட்?" கேட்டே விட்டாள்.

"எதிர்பார்த்தது போல் வரவில்லை, ஆனால் வெயிட் பண்ணிக் கொண்டிருக்கிறம்"

"ஓ...அப்பிடியோ! ஆனால் என்ன றிசல்ட்? மெடிசின் கிடைக்கும் என்றால் இவ்வளவுக்கும் இன்ரவியூவுக்கு வந்திருக்க வேணுமே?" அகல்யா விடுவதாயில்லை.

மேசையில் இருந்த அனைவரும் வாசுகியையே பார்த்துக் கொண்டிருந்தனர். வாசுகிக்கு அழுகையே வந்து விடும் போலிருந்தது. நானே துக்கத்தில் எல்லையில் நின்று உள்ளுக்குள் மருகிக் கொண்டிருக்கின்றேன். அடுத்தவரின் றிசல்டை அறிவதில் இவர்களுக்கு என்ன தேவை? படிப்புத் தான் எல்லாம் என்ற ஊர் மனநிலையுடன் வாழும் ஒரு பெற்றவருக்கு இப்படி ஓர் ஏமாற்றம் எவ்வளவு வலியைக் கொடுக்கும் என்பது தெரியாதவர்களா இவர்கள் அல்லது அடுத்தவரைக் கிண்டிப் பார்ப்பதில் சுகம் காண்கின்றார்களா? நல்லவேளை சுதா உதவிக்கு வந்தாள்.

"எதுவானால் என்ன? விருப்பம் இருக்கும் துறையை எப்பிடியும் படிக்கலாம்தானே?" கலங்கிய கண்களுடன் வாசுகி எழுந்து விட அகல்யாவும் குணவதியும் ஏதோ கதைப்பது தெரிந்தது. அகல்யாவின் பிள்ளைக்கு றிசல்ட் வந்தபோது, றிசல்டைப் பற்றிக் கேட்டவர்களுக்கு சூடாகப் பதில் கொடுத்ததாகக் கேள்விப்பட்டிருந்தாள். அடுத்தவருக்கும் அதே வலிதான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டாமா? மெதுவாக ஆறி வரும் புண்ணைக் குத்திச் சுகம் காண காத்திருப்பவர்களிடம் எப்படித் தப்பிக்கப் போகின்றேன்? சாப்பிடப்போனபோது பின்னாலேயே ஓடி வந்த கலா.

"சுஜந்தன் நன்றாகப் படிக்கும் பிள்ளை. வாழ்த்துகள். நல்ல றிசல்ட் தானே?"

"ம்....ம்....பார்ப்பம்."

"நினைச்சது கிடைக்கும்" கலா சொல்லி விட்டு நகர்ந்து விட்டாள். அடுத்ததாகப் பரிசு கொடுத்து வாழ்த்தும் கியூ. கணவனுக்குப் பின்னால் மறைந்திருந்தும் தப்பிக்க முடியவில்லை.

"சுஜந்தனுக்கு என்ன றிசல்ட்?" சுமதியின் கேள்வி. வாசுகி வாயே திறக்கவில்லை. பதில் சொல்லாததால் 'நல்ல றிசல்ட் இல்லை போல' என்ற வதந்தி பரவும் என்று தெரிந்திருந்தும் பதில் சொல்ல முடியாத அளவுக்கு உள்ளம் நொந்திருந்தது. அதற்குள் புத்திசாலித்தனமாக சீலனின் வாயைக் கிண்டி வாசுகி றிசல்டை அறிந்து கொண்டு விட்டிருந்தாள்.

மறுநாள் என்ன கற்கைநெறி கிடைக்கும் என்பதை அறிவிக்கும் நாள். வாசுகியுடன் சேர்ந்து சீலனும் பட்டினி கிடந்தான். கடவுளிடம் எதையும் வேண்டிக் கொள்ளத்தோன்றவில்லை. வேண்டித்தான் என்ன பயன் என்று வெறுப்பாக இருந்தது.

பல்மருத்துவம் கிடைத்தும் படிக்க விருப்பமில்லை என்று சொல்லி விட்ட பிள்ளையை வற்புறுத்த முடியவில்லை. 'மருத்துவர்' என்ற காத்திருப்புடன் மொத்தமாக முப்பது வருடங்கள் கடந்தன எனும் போது ஏமாற்றத்தை ஜீரணிக்க முடியவில்லை.

போனில் அழைப்புகளை ஒரேயடியாக எடுக்காமல் இருக்க முடியவில்லை.

உச்சுக்கொட்டல்கள், நோகாத நையாண்டிக் குத்துகள், பிள்ளை ஆசைப்படுவதைப் படிக்க விடுமாறு புத்திமதிகள், பிள்ளையின் வாழ்க்கை முக்கியம் என்ற அறிவுரைகள், றிசல்ட் என்ன என்று கேட்டு விட்டு, எங்களுக்கும் உந்த வலி பற்றித் தெரியும், எதற்காக மற்றவர்களை நோண்டிக் கொண்டிருக்க வேண்டும் என்கின்ற முதலைக்கண்ணீர் என்று வேதனையின் வடுவை ஆற விடாமல் யாராவது கிண்டிக் கொண்டே இருந்தார்கள். மறக்க நினைத்தும் மறக்க விடாமல் பார்ப்பவர்கள் துருவிக் கொண்டிருக்க வாசுகிக்கு ஒரு கட்டத்தில் வெளியில் செல்வதற்கான ஆசையே போய்விட்டது. எவர் முகத்தையும் பார்க்காமல் வீட்டில் நிம்மதியாக இருந்தால் போதும் என்றாகி விட்டது.

சீலன் வேறு "எல்லாம் நன்மைக்கே. விடுமன், எல்லாவற்றுக்கும் ஏதோவொரு காரணம் இருக்கும்" என்று தத்துவம் சொல்லி வாங்கிக் கட்டிக் கொண்டான்.

அடுத்த நாள் அழைப்பெடுத்த சுதா "சுஜந்தன் ஏன் பொண்ட் மெடிசினை முயற்சி செய்யக் கூடாது?" என்று ஆலோசனை சொன்னாள். அத்துடன் அதற்கும் நல்ல புள்ளிகள் எடுத்திருக்க வேண்டும், உளப்பரீட்சையில் நல்ல புள்ளிகள் வாங்க வேண்டும், நேர்முகப்பரீட்சையில் தேறவேண்டும் என்று நிறையத் தடை தாண்டல்கள் இருக்கின்றன என்று எச்சரித்தும் வைத்தாள். கருகிய வாசுகியின் ஆசைகள் மீளத் தளிர் விட்டன. ஆனால் இப்போது யாரை நம்பி வேண்டிக்கொள்வது என்பது தான் தெரியவில்லை. மகனுக்கு மருத்துவக் கற்கை கிடைக்க வைப்பதற்கான பொறுப்பை யாரிடம் கொடுப்பது என்று தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கி விட்டாள். சங்கடம் தீர்க்கும் விநாயகரை நம்பலாமா, விடலாமா? வேண்டுதலை விநாயகரின் காதுக்கு எப்படி நேரடியாகக் கொண்டு செல்வது? என்ன நேர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்? என்பதான கேள்விகள் அவள் தலையைக் குடையத் தொடங்கின.

ஒருகட்டத்தில் எல்லாக் கேள்விகளையும் தூரப்போட்டுவிட்டு, சீலனிடம் ' நீங்கள் இந்தமுறை அவனை வழிப்படுத்தினால் என்ன?' என்று கேட்டாள். சீலனால் நம்பவே முடியவில்லை. எப்போதும் மட்டம் தட்டிப்பேசும் வாசுகியா இப்படிக் கேட்கிறாள்?

' நானும் ஹெல்ப் பண்றன். ஆனால் அவனுக்கு என்ன செய்யோணும் எண்டு உமக்குத்தான் நல்லாத் தெரியும். நீர் சொன்னாத்தான் அவன் கேப்பான் . ரண்டுபேரும் சேர்ந்து அவனை மெடிசின் படிக்கிற வழியைப் பாப்பம்'

சீலன் சொல்லச் சொல்ல, வாசுகிக்கு நம்பிக்கை பிறந்தது. மெதுவாக அவன் தோளில் சாய்ந்தாள்.



# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்;

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

உலகம் அறிந்த பெயர் சுபாஸ் சந்திரபோஸ். யாழ்ப்பாண மக்கள் அல்லது உரும்பிராய் மக்கள் கூட அறியாத பெயர் சுந்தரலிங்கம். பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஹிட்லருடன் இணைந்தது ஆயுதப்போராட்டம் நடத்திய விடுதலைப்போராட்ட வீரர் சுபாஸ் சந்திரபோஸ். யாழ்ப்பாணத்திலுள்ள வீடுகள் சிலவற்றில் இப்போதும் சுபாஸ் சந்திரபோஸின் பிரேம் போட்ட படத்தைக் காணலாம். சுபாஸ் சந்திரபோஸும் சுந்தரலிங்கமும் இந்திய நிர்வாக சேவைப்பரீட்சைக்குத் தோற்றினர். சுபாஸ் சந்திரபோஸ் பரீட்சையில் தோல்வியடைந்தார். சுந்தரலிங்கம் சித்தியடைந்தார். சுபாஸ் சந்திரபோஸ் அடுத்த வருடமே இரண்டாவது தடவையாக தோற்றி சித்தியடைந்தார்.

இந்த விடயத்தை அண்மையில் கனடாவில் காலமான ஈழவிடுதலைப்போராட்டத்தின் முன்னோடிகளுள் ஒருவரான ஈழவேந்தன், சுந்தரலிங்கத்தின் 101 ஆவது பிறந்த தினத்தன்று கொழும்பு பத்திரிகை ஒன்றில் எழுதியிருந்தார்.

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இந்தியக் குடியியல் சேவைப்பரீட்சை (Indian Civil Service - ICS) இலங்கை இந்தியா இரு நாடுகளுக்கும் பொதுவாக நடத்தப்பட்டது. பின்னர் இலங்கைக்கு தனியாக நடத்தப்பட்டது (Ceylon Civil Service-CCS). இப்போது இலங்கை நிர்வாக சேவைப்பரீட்சை (Sri Lanka Administrative Service-SLAS) என நடத்தப்படுகிறது.

## விசித்திர சம்பவம்

இலங்கை நீதித்துறை வரலாற்றில் இடம்பெற்ற ஒரு விசித்திரமான சம்பவம் ஒன்றை இங்கு பகிர்வது பொருத்தமானது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் ஒரு வழக்கில் நீதிபதியாகவும் சட்டத்தரணிகளாகவும் உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாகியமைதான் அந்தச் சம்பவம். இந்தப் பெருமை அடங்காத்தமிழன் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தினரையே சாரும். மூத்த சகோதரன் நாகலிங்கம் நீதிபதியாக அமர்ந்திருக்க, சுந்தரலிங்கம் எதிரி சார்பாகவும் அவரது சகோதரர் தியாகலிங்கம் வழக்காளி சார்பாகவும் ஆஜராகினர். இந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. உலகில் வேறு எங்காவது இப்படியான ஒரு சம்பவம் நடைபெற்றதா தெரியவில்லை.

*(ஆதாரம் =Kirthie Abeyesekara The Island 11.02.2001)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நீங்களும் உங்கள் கைவண்ணங்களை, ஆக்கங்களை அனுப்பலாம்.

**மாணவர்களே!**

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555





**வி. டிஷானுஜா,**
தரம் - 8
யா/வேம்பிடி மகளிர்
உயர்தரப் பாடசாலை



**அ.வைஷ்ணவி**
தரம் 7
யா/மகாஜனக் கல்லூரி

**சி.அபிலாஷ்,**
தரம் - 4B
யா/புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்.





**கே.கேதாஜினி**
தரம் - 10
யா/கொக்குவில்
இந்துக் கல்லூரி



**ஞா. பார்கவி,**
தரம் - 3C,
யா/புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்.



**எஸ்.பிரவின்**
தரம் - 11
யா/சாவகச்சேரி
இந்துக் கல்லூரி.



**வி.பிரியங்கா,**
தரம் -7B,
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை.



**எஸ்.வக்சயா,**
யா/கொக்குவில்
இந்துக் கல்லூரி.

# சிவபூஜையில் கரடியா?

தெரிந்தவருடன் சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது இன்னொருவர் குறிக்கிட்டால்,சிவ பூஜையில் கரடி புகுந்தமாதிரி என்று சொல்வார்கள்.
அது எப்படி பூஜை அறைக்குள் கரடி வரமுடியும்.
உண்மையில் இதில் 'கரடி' என்பது மிருகத்தை குறிக்காது.'கரடி' என்பது ஒரு வகை வாத்தியக் கருவி. முற்காலத்தில் மன்னர்கள் சிவபூஜை செய்யும்போது கரடி வாத்தியம் வாசிக்கச் செய்வார்கள். இதைத்தான் சிவபூஜையில் கரடி என்று நாம் வேறு ஒரு பொருளில் பயன்படுத்துகிறோம்.



**தீ.நயனிகா,**
தரம் -3c
யா/சாவகச்சேரி இந்து
ஆரம்பப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ கோகுலராகவன்

# கடவுளை மோகித்த கவிதை


ஜேம்ஸ் கிர்கப்

தன் கவிதையால் கடவுள் நிந்தனை (Blasphemy) செய்த கவிஞர் ஒருவரை அறிந்து கொள்வோம்.

ஜேம்ஸ் கிர்கப் (James kirkup) ஒரு பிரித்தானியக் கவிஞர், மொழிபெயர்ப்பாளர்,விரிவுரையாளர். 1976 இல் அவர் எழுதிய கவிதை 'The love that Dares to speak its Names'

சர்ச்சைக்குரிய கவிதையாக மாறியது. அதில் யேசு நாதர் சிலுவையில் அறையப்பட்ட பின் அந்த உடலத்தை போர் வரன் ஒருவன் மோகிப்பது போல கவிதை எழுதப்பட்டது. போர்வீரன் மட்டுமல்ல இன்னும் பலர் என்று கவிதை காட்டி உள்ளது. இதனால் அது 'கடவுள் நிந்தனை' என்ற விமர்சனத்துக்கு உட்பட்டது .

கடவுளை மோகிப்பது கடவுள் மீதான அன்பால் என்று கருத இடமுண்டு. இதை ஆண்டாள் பாசுரங்களிலும் காணலாம்.

ஆனால் இந்தக் கவிதையால் கிறிஸ்தவர்கள் வெகுண்டு எழுந்தார்கள்.

யேசுநாதரின் உயிரற்ற உடலை ஆறேழு பேர் மோகிப்பதாக அந்தக் கவிதையில் சொல்லப்பட்டிருந்ததுதான் இதற்குக் காரணம். இதனை வெளியிட்ட கேய் நியூஸ் (Gay News ) என்ற பத்திரிகைக்கு எதிராக மேரி வைற் ஹவுஸ் ( Mary Whitehouse) என்ற பெண்மணி வழக்கு தொடர்ந்தார். கேய் நியூஸின் உரிமையாளர் டெனிஸ் லெமொன் ( Denis Lemon ) பிரதிவாதியாகக் குற்றம் சாட்டப்பட்டார். இந்த வழக்கை மூன்று நீதிபதிகள் விசாரித்து தீர்ப்பு வழங்கினர்.

கேய் நியூஸ் நிறுவனமும், அதன் உரிமையாளரும் குற்றவாளிகளாக இனம் காணப்பட்டனர்.

கேய் நிறுவனத்துக்கு 1000 பவுண்ஸ் தண்டப்பணமும் , அதன் உரிமையாளருக்கு 500 பவுண்ஸ் தண்டப்பணமும் , அத்தோடு ஒன்பது மாத சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டன.

நீதிபதிகள் தமது தீர்ப்பில், "கிறிஸ்தவ மதத்தை மட்டு மல்ல எந்த மதத்தையும் நிந்திப்பது போல ஆக்கங்கங்களை வெளியிடுவது அந்த மதம் சார்ந்தவர்களை அவமதிக்கும் செயற்பாடாக இருக்கும் என்பதால் இவற்றை வெளியிடுவது தவறாகும் " என விவரித்தனர்.

கேய் நிறுவனம் தண்டப்பணம் செலுத்தியதோடு மட்டுமல்ல மேரி வைற்கவுஸ் செலவு செய்த வழக்கு செலவான 7,763 பவுண்ஸ் பணத்தையும் திருப்பி செலுத்தவேண்டி இருந்தது.

என்ன செய்ய அழுதழுது கட்டி இருப்பார்கள். இதற்கு எதிராக கேய் நியூஸ் நிறுவனம் மேன்முறையீடு செய்த போதும் அது தள்ளுபடி செய்யப்பட்டது. இதில் ஜேம்ஸ் கிர்கப் குற்றவாளியாக்கப்பட வில்லை. எழுதுவது குற்றம் அல்ல வெளியிடுவது தான் குற்றமாக இருந்திருக்கலாம்.

இதன் வழக்கின் பின்னரே அநேகமான பத்திரிகைகள், சஞ்சிகைகள் ' இதில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகள், கவிதைகள், ஆக்கங்கள் போன்றவற்றில் இருக்கும் கருத்துக்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பு' என்ற வாசகத்தைப் பதிக்க தொடங்கின. "யாரப்பா இவ்வளவு காசு கட்டித் தொலைக்கிறது.?" என்ற எண்ணத்தால் வந்த விளைவாக இருக்கலாம்.

ஆனால் ஜேம்ஸ் கிர்கப்பின் அந்தக் கவிதையை தமிழாக்கம் செய்வதற்கு எனக்கு சங்கடமாக இருக்கிறது. ஏனெனில் அப்பட்டமான தூஷண வார்த்தை பிரயோகங்கள் இருக்கின்றன. விட்டு விடுவோம். தேடிப்பிடித்து படியுங்கள்.

இத்தனையும் ஜேம்ஸ் கிர்கப்பின் 'தனியே நிற்கும் வெருளி' (The lonely scarecrow ) கவிதையை தமிழாக்கப்போக கிடைத்த விடயங்கள்.

அந்தக் கவிதையை தமிழாக்கம் செய்து தருகிறேன்.

## தனியே நிற்கும் வெருளி

என்னிடம் காய்ந்த எலும்புகள்

இரண்டே இரண்டு இருக்கின்றன.
ஒன்று தும்புத்தடி கொட்டன்.
மற்றது முறிந்த தடி.
எனது கிழிந்த கையுறை என்னை
அவமானப்படுத்தும் ஒன்று.
ஆப்பு மாதிரி நிற்கும் ஒரு கால்
புதைந்து கிடக்கிறது.
ஒரு தொழிலாளியின்

பழைய கிழிந்த ஆடைகளை

அணிந்து இருக்கிறேன்.
சட்டையோ, கோட்டோ


ஒன்றும் அழகாக இல்லை.

மழை ,வெயில், பனி,சூடு

எல்லாவற்றிலும் சிலுவை சுமந்தபடி
நிற்கிறேன்.
யாருக்கும் உதவ முடியாதவன்.
என் கோமாளித் தொப்பி நிறைய
வைக்கோலை அடைந்துள்ளார்கள்.

ஓ ,அழகிய பறவைகளே என் மீது
கூடு கட்டி கொள்ளுங்கள்.
ஏன் விலகிப் போகிறீர்கள்?

இந்தக் கவிதையைப் படிக்கும்போதே, சோமசுந்தரப்புலவரது "கத்தரித்தோட்டத்து வெருளி "பாடல் உங்களுக்கு ஞாபகம் வருகிறதா?








# ஊர்ப்புதினம்

பாகம் 2

○ இராகவன்

மின்னாமல் முழங்காமல் ஊர்ப்புதினமும் இதோட நூறாவது அத்தியாயத்தைத் தொட்டிருக்கிறது எண்ட மகிழ்ச்சியான செய்திகளை உங்களோட பகிர்ந்துகொள்கிற இந்தநேரத்தில் (உங்களுக்குச் சில நேரங் குழப்பமாயுமிருக்கும். அதால ஒரு சிம்பிளான விளக்கந்தாறன். ஊர்ப்புதினம் முதலாம் பாகம் அறுபது அத்தியாயத்தோட முடிந்தது. இப்ப இரண்டாம் பாகம் நாற்பது அத்தியாயம் வந்திருக்குது. அப்ப அறுபதும் நாற்பதும் நூறு. சரிதானே) இந்த நேரத்தில ஊர்ப்புதினத்தைத் தீவிரமாக வாசிக்கிற இரண்டு பேரைப் பற்றி கதைக்கிறது பொருத்தமாயிருக்குமெண்டு நினைக்கிறன்.

அதில முதலாவதாள் என்ர நெருங்கின சிநேகிதன் ஜெயமோகன். ஊர்ப்புதினம் தொடங்கினதிலயிருந்து இற்றைவரைக்கும் ஒரு 'சப்டரும்' விடாமல் வாசிக்கிற ஒராள் அவன்தான். ஆளின்ரை சொந்த இடம் தெடுத்தனை. இப்ப கலியாணம் முடிச்சு புலோலி உபய கதிர்காமத்திலயிருக்கிறான். என்னை விட இரண்டு வயது மூப்பு. எங்கடையூர் மகாகவி நட்சத்திரன் செவ்விந்தியனும் (அருண் அம்பலவாணர்) ஜெயமோகனும் ஹாட்லிக் கொலிஜ்ஜில ஒண்டாப் படிச்சவங்கள். இப்ப கிட்டடியில நட்சத்திரன் செவ்விந்தியன் கர வெட்டிக்கு வரேக்குள்ள ஆளை மோட்டார் சைக்கிள்ள குப்பிழான் ஐ.சண்முகன் வீட்டை ஏத்திக் கொண்டு போனன். அப்ப குஞ்சர் கடையில மறிச்சு ஒரு கடையில ரீகுடிக்கேக்குள்ள நட்சத்திரன் செவ்விந்தியன், "மச்சான் அப்ப ஹாட்லியில என்னோட ஜெயமோகன் எண்டொரு கட்டையன் படிச்சவன். அவன் இப்ப என்ன செய்யிறான்?" என கேட்டாப்போல "அவன் இப்ப கற்கோவளம் பள்ளிக்கூடப் பிறின்ஸிப்பலாயிருக்கிறான்" எண்டு சொன்னன்.



40

ஜெயமோகன் ஒரு பௌதீகவியல் பட்டதாரி. ஆளுக்கும் எனக்கும் ஒண்டாத்தான் கம்பஸ் கிடைச்சுது. ஜெயமோகன் எனக்கு நெருங்கின சிநேகிதம் மாதிரி எங்கட இளையண்ணாவுக்கு ஜெயமோகன்ர தமையன் ஜெயகாந்தன் நெருங்கின சிநேகிதம். ம்... அதிருக்கட்டும். இப்ப விசயத்துக்கு வருவம். ஜெயமோகனை எங்கடை சிநேகிதங்களான பானு, தயன், உதயன், தீபன் இவங்கலெல்லாம் 'அல்கம' எண்டுதான் கூப்பிடுவாங்கள்.

1990 களில இலங்கை அரசின் முப்படைத்தளபதியாயிருந்தவர் பிரிகேடியர் லக்கி அல்கம. அப்படி அடிக்கடி எங்கடை வான் பரப்பெல்லாம் ஹெலிகொப்ரர் குறுக்கும் மறுக்கும் ஓடித்திரியும். ஒருநாள் சிநேகிதப் பொடியள் கூடியிருந்து கதைச்சுக் கொண்டிருக்கேக்குள்ள ஹெலிகொப்ரர் ஒண்டு தாழப் பறந்து போச்சுது. 'எங்கையடா உந்த ஹெலி வலுபதிவாப் போகுது?' எண்டொருத்தன் கேக்க அதிலயிருந்த ஜெயமோகன், 'அல்கம பலாலிக்கு அவசரமாப் போறார்' எண்டு சொன்னான்.

அண்டையிலயிருந்து ஆளுக்குப் பொடியள் 'அல்கம' எண்டு பட்டம் வைச்சிட்டாங்கள். அல்கம (ஜெயமோகன் ) கணித பாடத்தில வலுபுலி. சுனாமி வாறதுக்கு முந்தி செம்பியன்பற்றுப் பள்ளிக்கூடத்தில படிப்பிச்சவர். பிறகு உடுப்பிட்டி அமெரிக்க மிசன் பள்ளிக்கூடத்தில படிப்பிச்சு இப்ப பருத்தித்துறை கற்கோவளம் ஏ.எம்.ஸி.யில அதிபராயிருக்கிறார். நல்ல வாசகன். எந்தப் போட்டி பரீட்சையெண்டாலும் விண்ணப்பிச்சு எழுதுவார். அதில செலக்ரானாலும் பிறகு அந்த வேலைக்கும் போறேல்ல. நானும் ஆளும் கம்பஸ் கிடைச்சாப்போல ஒண்டாத்தான் பிறிற்றோ மாஸ்ரரிட்டை இங்கிலீஸ் படிக்கப் போனனாங்கள். ஒவ்வொரு கிழமையும் ஊர்ப்புதினத்தை வாசிச்சுப் போட்டு என்னோட சீரியஸா டிஸ்கஸ் பண்ணுவார். இன்னொரு சந்தர்ப்பத்தில ஆளைப்பற்றி ஃப்பாப் பாப்பம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் எதிர்க்கிறார் சம்பந்தர்?

தி.ராஜ்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் செயற்பாட்டு அரசியலிலிருந்து ஒதுங்கிப் பல ஆண்டுகள் ஆகின்றன. நாடாளுமன்றதில் கூட அவருக்கு அடிக்கடி 3 மாதங்கள் விடுமுறை வழங்கப்படுகின்றது. அவரது வயது மூப்பால் இயங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார். மக்களைச் சந்திப்பது அவரால் இயலாதகாரியம்.

இப்படிப்பட்ட நிலையில்தான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவரது கருத்துகள் சில வெளியாகியிருந்தன. தமிழ் மக்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் ஆர்வமற்று இருக்கின்றார்கள் எனச் சம்பந்தர் சொல்லியிருந்தார். ஆகப்பிந்தியதாக, 'தென்னிலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் யார் போட்டியிடபோகின்றார்கள் என்பது தெரியவில்லை. அதை அறிந்த பின்னர் நாம் முடிவு எடுக்கலாம். அவசரப்படத் தேவையில்லை' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சம்பந்தனைப் பொறுத்தவரையில் தேர்தல் புறக்கணிப்போ, தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதோ என்ற நிலைப்பாட்டை எடுக்கப்போவதில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. மீண்டும் ஒரு தடவை சிங்கள வேட்பாளர் ஒருவரை ஆதரிக்கப்போகின்றார். அவரது நிலைப்பாட்டையே பெரும்பாலும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் எடுக்கக்கூடும். அவரும் தேர்தல் புறக்கணிப்பையும், தமிழ்ப் பொது வேட்பாளர் களமிறக்கத்தையும் கடுமையாக எதிர்க்கின்றார். வேண்டுமானால், எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் அதாவது சிங்களத் தரப்புகளின் ஆதரவுடன் பொதுவேட்பாளராகக் களமிறங்குவது தொடர்பில் பரிசீலிக்கத் தயார் என்பதைச் சொல்கின்றார். இவர்களைப் பொறுத்தவரையில் எத்தனை தடவைகள் சிங்களவர்களிடம் ஏமாந்தபோதும் திருந்தப் போவதில்லை என்பது தெளிவு.

நல்லாட்சிக்காலத்தில் பல தரப்புகளும் எச்சரித்தபோதும், கட்சிக்குள் இருந்தவர்கள் எதிர்த்தபோதும் கண்ணைமூடிக்கொண்டு ஆதரவு வழங்கினார்கள். புதிய அரசமைப்பு 'அந்தா வருகிறது. இந்தா வருகிறது' என்று சிறுபிள்ளைக்கு ஏமாற்றி உணவு ஊட்டுவதைப்போல தமிழ் மக்களை முட்டாளாக்கினார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. கடைசியில், நம்ப வைத்து ஏமாற்றி விட்டார்கள் என்று தமிழ் மக்கள் முன் வந்து நின்றார்கள். எந்தவொரு சிங்களத் தலைவரும் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கவில்லை. இப்படியான நிலையில் எப்படி மீண்டும் சிங்களத் தலைவர் ஒருவரை நோக்கி ஆதரவுக்கரம் நீட்ட முடியும்?

**தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்ப்பவர்களால் எந்தவொரு தர்க்கரீதியான நியாயப்பாடுகளையும் முன்வைக்க முடியவில்லை. எதிர்க்கவேண்டும் என்பதற்காகவே எதிர்க்கின்ற கூட்டமும், தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறங்கினால் தங்கள் சிங்கள எஜமானர்களுக்கான வாக்கு இல்லாமல் போய்விடுமே என்ற ஏக்கத்தால் இன்னொரு கூட்டமும் எதிர்க்கின்றது.**

**தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்ப்பவர்களால் எந்தவொரு தர்க்கரீதியான நியாயப்பாடுகளையும் முன்வைக்க முடியவில்லை. எதிர்க்கவேண்டும் என்பதற்காகவே எதிர்க்கின்ற கூட்டமும், தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறங்கினால் தங்கள் சிங்கள எஜமானர்**களுக்கான வாக்கு இல்லாமல் போய்விடுமே என்ற ஏக்கத்தால் இன்னொரு கூட்டமும் எதிர்க்கின்றது.

தமிழ்ப் பொதுவேட்பாளரைத் தவிர்ந்த வேறெந்தத் தெரிவையும் தர்க்க ரீதியாக தமிழ் மக்களிடம் நியாயப்படுத்தமுடியவில்லை. தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் 2019ஆம் ஆண்டு தீவிரமாக ஆராயப்பட்டிருந்தாலும் அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இப்போது அது தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கட்சிகள், சிவில் சமூகத்தினர் அதன் பின்னால் அணிதிரண்டிருக்கின்றனர்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் என்பது ஓர் அடையாளமே. தமிழ் மக்கள் தங்கள் கொள்கை நிலைப்பாட்டை வெளிப்படுத்தவே பொதுவேட்பாளர் என்ற விடயத்தை ஆதரிக்கப்போகின்றனர். இந்த நாட்டின் சிங்கள ஆட்சியாளர்களை ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதையும் தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதன் ஊடாக தமிழ் மக்கள் பறைசாற்றுவுள்ளனர். ஒரு கல்லில் பல மாங்காய் என்பதைப்போல, தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதன் ஊடாக தமிழ் மக்கள் பல்வேறு விடயங்களைச் சொல்ல முடியும்.

**இந்த விடயத்தை குருட்டுத்தனமாக எதிர்ப்பவர்களை தமிழ் மக்கள் எதிர்க்கத் தொடங்கினால் அவர்கள் காணாமற்போய்விடுவார்கள் என்பதே யதார்த்தம்.**

## பதினைந்தாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருகச் செய்யும் வேலை என்று ஒரு பகுதியினர் குற்றம் சாட்டுவார்கள். காயங்களைக் கிண்டாதீர்கள். அயர் மூடிய காயங்களின் அயரை உரித்து அதை புதுப்பிக்காதீர்கள் என்றெல்லாம் கேட்கிறார்கள். அவர்களிடம் திருப்பிக் கேட்க வேண்டும். காயம் எப்பொழுது ஆறியது? காயங்கள் ஆறவில்லை. அவை எப்பொழுதும் உண்டு. புதிய காயங்களும் உண்டு. மயிலத்தமடுவில், குருந்தூர் மலையில், வெடுக்குநாறிமலையில் புதிய காயங்கள் உண்டு. ஓர் உணவை அதாவது நினைவை குற்றமாகப் பார்க்கும் அரசியல் காயங்களை ஆற விடாது. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய கூட்டுக் காயங்கள் ஆறாதவை. அவை ஆறாதவை என்பதனால்தான் அவற்றைக் குறித்து உரையாட வேண்டியிருக்கிறது. அவற்றை எப்படிச் சுகப்படுத்துவது என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. பலஸ்தீனக் கவிஞர் ஒருவர் எழுதினார் 'குணப்படுத்தவியலாத ஒரு காயமாக' நினைவைப் பேணுவது என்று. அதுதான் உண்மை. ஈழத்தமிழர்களின் கூட்டுக்காயங்களும் கூட்டு மனவடுக்களும் குணப்படுத்தப்படாதவை.

அதற்கான குணமாக்கல் செய்முறைகளை சிறுதொகை மருத்துவர்கள் மட்டுமே முன்னெடுக்கின்றார்கள். அதற்கும் போதியளவு மனநல மருத்துவர்கள் கிடையாது. அது மட்டுமல்ல, அது மருத்துவர்களால் மட்டும் சுமக்கப்படக்கூடிய ஒரு சுமை அல்ல. அது ஒரு கூட்டுச்சுமை. கூட்டுக் காயங்களுக்கும் கூட்டு மன வடுக்களுக்கும் கூட்டுச்சிகிச்சைதான் இருக்கலாம். தனியே மருத்துவர்கள் மட்டும் அதைச் சமாளிக்கமுடியாது. தவிர்க்க முடியாதபடி அது ஓர் அரசியல் பண்பாட்டுச் செய்முறையாகத்தான் இருக்கலாம். அதற்குப் பொருத்தமான அரசியல் தலைமைவேண்டும். அத்தலைமையின் கீழ் குடிமக்கள் சமூகங்கள்; மதத்தலைவர்கள்; கருத்துருவாக்கிகள்; புத்திஜீவிகள்; படைப்பாளிகள் என்று எல்லாத் தரப்புகளும் இணைக்கப்படவேண்டும்.

கூட்டுச் சிகிச்சையானது மேலிருந்து கீழ் நோக்கியும் கீழிருந்து மேல் நோக்கியும் செய்யப்படவேண்டும். மேலிருந்து கீழ் நோக்கி அது ஓர் அரசியல் தீர்மானமாக இருக்க வேண்டும். அது அரசியல் தீர்வாக அமையவேண்டும். இனப் படுகொலைக்கு எதிரான நீதியாக அது அமைய வேண்டும்.

கீழிருந்து மேல் நோக்கி அந்தத் தீர்வை நோக்கி தமிழ்மக்கள் போராட வேண்டும். அந்தப் போராட்டம்தான் தமிழ் மக்களை தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுதலை செய்யும். தமிழ்மக்கள் இப்பொழுது சிதறிப் போய் இருக்கிறார்கள். ஒருவர் மற்றவரை நம்பாத ஒரு மக்கள் கூட்டமாக; ஒருவர் மற்றவரைச் சந்தேகிக்கும் ஒரு மக்கள் கூட்டமாக; எல்லாருக்கும் பின்னாலும் சதிகளையும் சூழ்ச்சிகளையும் தேடும் ஒரு மக்கள் கூட்டமாக; கட்சிகளாக; வடக்கு - கிழக்காக; சமயமாக; சாதியாக இன்னபிறவாக சிதறிப்போய் இருக்கிறார்கள்.

அதேசமயம் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு புலம்பெயரும் தமிழர்கள் மத்தியில் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், உயர் உத்தியோகங்களில் இருந்தவர்கள் என்ற வகையினரும் அடங்குவர். இவ்வாறாக மூளைசாலிகளும் தொழில் அனுபவம் மிக்கவர்களும் வெளியேறிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தைத் திரட்டுவது எப்படி? ஒருவர் மற்றவரை நம்பாமல் சமூகத்தைத் திரட்டமுடியாது. ஒருவர் மற்றவரை நம்புவதில் இருந்துதான் சமூகத் திரட்சி தொடங்குகின்றது. எனவே நம்பிக்கை முக்கியம். சமூகத்துக்கு நம்பிக்கையைக் கொடுக்கவேண்டும். புலம்பெயரும் தலைமுறைக்கு நம்பிக்கையைக் கொடுக்கவேண்டும். அவ்வாறு நம்பிக்கையைக் கொடுக்க யார் உண்டு? அந்தக் கூட்டு நம்பிக்கைதான் கூட்டுத்தோல்வி மனப்பான்மையிலிருந்தும், கூட்டுக் காயங்களில் இருந்தும், கூட்டு மனவடுக்களில் இருந்தும் ஒரு மக்கள் கூட்டத்தை விடுதலை செய்யும்.

ஈழத் தமிழர்கள் கேந்திர முக்கியத்துவம் மிக்க ஒரு புவிசார் அமைவிடத்தில் அமைந்திருக்கிறார்கள். எல்லாப் பேரரசுகளுக்கும் அவர்கள் தேவை. தமிழ் மக்களின் இந்தக் கேந்திர முக்கியத்துவத்தை தமிழ் மக்களே உணராதிருக்கிறார்கள். அனுமார் தன் பலத்தை தானே அறியாதிருந்தது போல. தமிழ் மக்களுக்கு அவர்களின் பலத்தை உணர்த்தி, அவர்களைப் பலமான திரளாக்கி, அவர்களை கூட்டு அவநம்பிக்கையிலிருந்து விடுவிப்பதுதான் கீழிருந்து மேல் நோக்கிய கூட்டுச் சிகிச்சையாக அமையும். அதுதான் கூட்டுத் துக்கத்தை அரசியல் ஆக்க சக்தியாக மாற்றும். அதுதான் உண்மையான நினைவு கூர்தலாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org